வெளியீடு 10-10-2006 Issued 10-10-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஜூலை 22, 2006—தொகுதி 4—எண் 1

Saturday the 22nd July, 2006—Volume 4—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...tive Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'P6.
Vol.4.1.
227378

22–7–2006

715
29.3.2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, அளித்தல்** | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்* | 1-56 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**<br><br>*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை: காவல் துறை, தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி–தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்* |
| 2. | **நிதி அமைச்சர்** | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**<br><br>*நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்* |
| 3. | **மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**<br><br>*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்* |

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்: @**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227378
சென்னை-600 008

---

@ உடல் நலக் குறைவு நிமித்தம் அவரது பொறுப்பிலிருந்த பொருள்கள் தற்காலிகமாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டன.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

**10 பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. **செய்தித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. **உணவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. **வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. **வணிக வரித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனம் மற்றும் சின்கோனா

24. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**25. சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

**26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

**28. மீன்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**29. பால் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**30. கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

**2. Minister for Finance** : **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

**3. Minister for Electricity and Rural Industries** : **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

**4. Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Union, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** : **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:@**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** : **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** : **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

@ Due to illness subjects allocated temporarily to Hon. Minister for Higher Education



11. **Minister for Revenue and Law** : **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** : **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** : **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** : **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** : **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development

16. **Minister for Health** : **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. **Minister for Labour** | : | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. **Minister for Hindu Religious and Charitable Endowments** | : | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 19. **Minister for Handlooms and Textiles** | : | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 20. **Minister for School Education** | : | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 21. **Minister for Commercial Taxes** | : | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 22. **Minister for Environment** | : | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. **Minister for Forests** | : | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. **Minister for Highways** | : | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 25. **Minister for Social Welfare** | : | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home |
| 26. **Minister for Animal Husbandry** | : | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. **Minister for Adi Dravidar Welfare** | : | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. **Minister for Fisheries** | : | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. **Minister for Dairy Development** | : | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. **Minister for Khadi** | : | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. | திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ்... கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



87. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. .. விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
95. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
106. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். .. முசிறி
108. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)

| | | |
|---|---|---|
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் திருமதி | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் வரதன், திரு. ம. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |



| | | |
|---|---|---|
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்–I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமசந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |

| | | |
|---|---|---|
| 201. | **ராஜா, திரு. என்கேகே.பெ.** | - ஈரோடு |
| 202. | **ராஜா, திரு. தி.க.** | - திருப்பத்தூர் |
| 203. | **லட்சுமணன், திரு. ச.** | - போடிநாயக்கனூர் |
| 204. | **லதா, திருமதி ஜி.** | - குடியாத்தம் |
| 205. | **லீமா றோஸ், திருமதி ரா.** | - திருவட்டாறு |
| 206. | **வசந்தகுமார், திரு. எச்.** | - நாங்குநேரி |
| 207. | **வரதராஜன், திரு. ரா.** | - விருதுநகர் |
| 208. | **விசுவநாதன், திரு. இரா.** | - நத்தம் |
| 209. | **விடியல் எஸ். சேகர், திரு.** | - காங்கேயம் |
| 210. | **விஜயகாந்த், திரு.** | - விருத்தாசலம் |
| 211. | **விஜயகுமார், திரு. கே.எஸ்.** | - கும்மிடிப்பூண்டி |
| 212. | **விஜயகுமார், திரு. பெ.சு.** | - போளூர் |
| 213. | **விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே.** | - செய்யாறு |
| 214. | **வீரசுபிலன், திரு. எம்.வி.ஆர்.** | - பேராவூரணி |
| 215. | **வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு.** | - சேலம்—2 |
| 216. | **வேதரத்தினம், திரு. எஸ்.கே.** | - வேதாரண்யம் |
| 217. | **வேலு, திரு. எ.வ.** | - தண்டராம்பட்டு |
| 218. | **வேலுசாமி, திரு. இல.** | - தருமபுரி |
| 219. | **வேலுசாமி, திரு. செ.ம.** | - பல்லடம் |
| 220. | **வேலுமணி, திரு. சு.ப.** | - பேரூர் |
| 221. | **வேல்துரை, திரு. பா.** | - சேரன்மகாதேவி |
| 222. | **வேல்முருகன், திரு. தி.** | - பண்ருட்டி |
| 223. | **வைத்திலிங்கம், திரு. ஆர்.** | - ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 6, விய — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜுலை 22, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில், காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

உலகோர் யாவரும் ஒரு மனதாய் உவந்தேற்கும் பெற்றியதாய், உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் ஒப்புயர்வற்ற பண்பாட்டின் சின்னமாய், முக்கடலும் முத்தமிடும் குமரி முனையில் நின்றொளிரும் அய்யன் திருவள்ளுவன் அருளிய வாய்மொழி,

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்"

தெளிந்து தேர்ந்த நண்பர்களுடன் சேர்ந்து, ஆற்ற வேண்டிய செயலை ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற வள்ளுவத்தின் வாய்மையை மனதிலே தாங்கி, தமிழ் மாநிலத்தை முன்னேற்றப் பாதையிலே முனைப்போடு இட்டுச் செல்லும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள; 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன்.

2. தமிழக அரசியல் வரலாற்றில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிக் கூட்டணி ஒன்றை உருவாக்கி, தேர்தல் களத்தில் வென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்து, 1969-ல் திடீரென்று அவர் மறைந்ததையொட்டி, அந்தப் பெருந்தகையின் பொது வாழ்வுப் புனித நடையினையே அடியொற்றி நடந்து, நாட்டு மக்கள் நலன் வளர்க்கும் நோக்குடன் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முதன் முறையாகவும், தற்போது ஐந்தாவது முறையாகவும் பொறுப்பேற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

3. நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அங்கமாக இடம் பெற்று அமைந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாட்டு மக்கள் மகத்தான வெற்றியினை அளித்துள்ளார்கள். தேர்தலுக்கான வாக்குறுதிகளை வழங்கிடும் அறிக்கையை வெளியிட்டபோது, "இந்த அறிக்கையே இந்த அரசின் நிதிநிலை அறிக்கையாக அமையும்" என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை மெய்ப்பிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்ற எங்களின் உறுதி மொழியின் விரிவாக்கமே இன்றைய நிதிநிலை அறிக்கையாகும்.

4. "உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற மாநில சுயாட்சி கொள்கை மனதிலே பதிந்திருக்கும் நிலையில் இந்த மாநிலத்து ஏழையெளிய பாட்டாளி மக்களையும், நடுத்தர மக்களையும் வாழ்விப்பதற்கான வழிவகைகளையும், திட்டங்களையும் இந்த அறிக்கையில் இடம் பெறச் செய்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.





முற்பகல் 10–05

5. மத்திய அரசு மற்றும் அண்டை மாநில அரசுகள் ஆகியவற்றுடன் மோதுதல் அற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து, நமது மாநில உரிமைகளையும், மக்களின் நல்வாழ்வையும் நிலைநாட்ட தொடர்ந்து பணியாற்றிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு

6. இயற்கைச் சீற்றத்தால் விளைந்த இடர்ப்பாடுகளால் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற பெருமை குலைந்து ஏற்றமிகு வாழ்விழந்து நைந்த உழவர் பெருமக்களுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும் உற்ற துணையாக இருக்க வேண்டியது அரசின் பொறுப்பு என உணர்ந்த காரணத்தால், அவர்கட்குச் செய்யும் தலையாய உதவியாக, அவர்கள் பட்ட கடனிலிருந்து பாதுகாத்து மீட்டிட; 6866 கோடி ரூபாய்க்கான கூட்டுறவுக் கடனை; (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சரவை பதவியேற்ற நாளிலேயே, பதவியேற்ற மேடையிலேயே – பல்லாயிரவர் முன்னிலையில் தேர்தல் வாக்குறுதியைச் செயல்படுத்தும்வண்ணம் தள்ளுபடி செய்து கையெழுத்திட்டு நிறைவேற்றியது ஒரு வரலாறு ஆகும். அதனையொட்டி கூட்டுறவு வங்கிகள் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1668 கோடி அளவிற்கான கடன் பொறுப்புகளை இவ்வரசே முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வகையில், நபார்டு வங்கிக்கு இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்காக, 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.435 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு வங்கிகளுக்கு இத்தள்ளுபடியால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டும் வகையிலும், விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும், இந்தத் திருத்த வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் திட்டத்திற்காக, ரூ.1435 கோடி இந்த ஆண்டுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் நிதியாண்டுகளிலும், இத்திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள ரூ.5431 கோடிக்கும் அதன்மீதான வட்டிக்கும், தேவையான ஒதுக்கீடுகள் படிப்படியாகச் செய்யப்படுவதன் மூலம் விவசாயிகள் தொடர்ந்து பயிர்க் கடன் பெறுவதும், இவ்வங்கிகளின் வைப்பீட்டாளர்கள் மற்றும் பணிபுரிபவர்களின் நலன் பாதுகாக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

7. விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க் கடன் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. நடப்பு குறுவை சாகுபடி காலத்திலிருந்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு சென்ற ஆண்டுவரை இருந்த 9 சதவீத வட்டி விகிதம் 7 சதவீதமாக குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 2 சதவீத வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஏற்றுக் கொள்ளும்.

8. பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆண்டுதான், உழவர் நெஞ்சம் உவகை பொங்கிட உரிய நாளாகிய ஜூன் திங்கள் 12 ஆம் தேதியன்று மேட்டூர் அணை பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டது. இத்துடன் பாசனக் கால்வாய்கள் தூர் எடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு பயிர்க்கடனும் மற்றும் இடுபொருட்கள் வழங்கும் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் இந்த ஆண்டு மொத்த உணவு உற்பத்தி 95 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் வேளாண்மை மற்றும் தொடர்புடைய இனங்களுக்கு ரூ.854.41 கோடியாக இருந்த மொத்த ஒதுக்கீடு, 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.977.98 கோடியாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

9. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் இன்றிக் குறைந்த விலையில் நுகர்வோர் காய்கறிகளைப் பெறவும் உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டம்தான் உழவர் சந்தைத் திட்டம். அனைவராலும் வரவேற்கப்பட்ட இந்தத் திட்டம் இடையில் தளர்வுற்று; தற்போது புத்துயிர் அளிக்கப்பட்டு 103 உழவர் சந்தைகள் மீண்டும் திறம்படச் செயல்படத் தொடங்கியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

10. விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விரயமின்றியும், உரிய விலை கிடைக்கும் வகையிலும் உலகத்தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், குளிர்விக்கும் சாதனங்கள், தரம் பிரிப்பு, பதப்படுத்துதல், மற்றும் மின்னணு ஏலமுறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று வணிக முனையங்கள் (**Terminal Markets**) சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய பெருநகரப் பகுதிகளில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவை, விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களுக்கு



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

விற்பனை வாய்ப்பை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிக்கும் வழிவகுக்கும். அத்துடன் கோவை மாவட்டம் பல்லடத்தில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைப் பழங்களுக்கும் ஏற்றுமதிக்கேற்ற வகையில் குளிர்பதன வசதிகளுடன்கூடிய விற்பனைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

11. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடியை ஊக்குவித்து அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை அறிமுகப்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய முந்திரி விளைநில ஏற்றுமதி மண்டலத்தின் பணிகள் முந்திரி விவசாயிகளுக்கு மேலும் பலன் தரக்கூடிய வகையில் செம்மைப்படுத்தப்படும்.

12. உயிரி எரி பொருள் (Ethanol) பெட்ரோலுக்கு மாற்றாகவும் பயோடீசல் (Bio-diesel) டீசலுக்கு மாற்றாகவும் பயன்படுகிறது. முதற்கட்டமாக பெட்ரோலுடன் எத்தனால் உயிரி எரி பொருளை 5 விழுக்காடு கட்டாயமாகக் கலந்து பயன்படுத்த மைய அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்வதற்கான வசதியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் சர்க்கரைச் சோளம் (sweet sorghum) மற்றும் சர்க்கரைக் கிழங்கு (sugar beet) மூலமும் எத்தனால் தயாரிக்கலாம் என்பதனால் இவைகளைப் பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

13. ஜெட்ரோப்பா (Jatropha) எனப்படும் காட்டாமணக்கு விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் பயோடீசலாக (Bio-diesel) டீசலுக்கு மாற்றாக பயன்படும் என்பதால் தரிசு நிலங்களில் காட்டாமணக்கு விளைவிக்க ஊக்குவிக்கப்படும்.

14. இதற்கு முன்பிருந்த ஆட்சியில் 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் மொத்தம் 50 இலட்சம் ஏக்கர் (20 இலட்சம் ஹெக்டேர்) தரிசு நிலங்கள் உள்ளன என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனையொட்டி திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் இந்தத் தரிசு நிலங்களைச் சீர் செய்து நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் அரசு அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

15. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கிராமம் வாரியாக தரிசு நிலங்கள் குறித்த புள்ளி விவரங்கள் வருவாய்த்துறை மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தரிசு நிலங்கள் அரசுப் புறம்போக்கு நிலங்களாகவும் தனியார் பட்டா நிலங்களாகவும் உள்ளன. அரசுப் புறம்போக்கு தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வழங்கப்படும். அதே நேரத்தில் சொந்தமாக தரிசு நிலம் வைத்திருக்கும் ஏழை விவசாயக் குடும்பங்களைப் பொறுத்தவரை, அந்நிலங்களை மேம்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக மாற்றித் தர வேண்டும் என்று அவர்களாகவே விரும்பிக் கேட்பார்களேயானால், அவற்றை அரசு செலவில் மேம்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாக மாற்றி அவர்களிடமே திருப்பி அளிக்கப்படும். இதற்கான தொடக்கப் பணிகள் நடந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

16. தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோரின் நலனுக்காக, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் 2000 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு இந்நல வாரியம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்படும். இதற்கான தனிச் சட்டமுன்வடிவு இக்கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

17. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவுள்ள சலுகைகள் என்னென்ன; நன்மைகள் யாவை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

- நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் மட்டுமல்லாது பதிவுபெற்ற குத்தகைதாரர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.

- இத்திட்டத்தின்கீழ் மகப்பேறு உதவி மாதம் ரூ.1000/– வீதம் 6 மாதத்திற்கு ரூ.6000/– வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- பத்தாம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு ரூ.1250/–, மாணவியருக்கு ரூ.1500/–, (மேசையைத் தட்டும் ஒலி) 12 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு ரூ.1750/–, மாணவியருக்கு ரூ.2000/– உதவித் தொகையாக வழங்கப்படும். தொழிற்பயிற்சி (ITI), பல்தொழில்நுட்பப் பயிற்சி (Polytechnic), இளங்கலை, முதுகலை, சட்டம், தொழில் கல்வி, முதுகலைத் தொழில் கல்வி ஆகியவற்றைப் படிக்கும் மாணவ மாணவியருக்கு ரூ.1250/– முதல் ரூ.6750/– வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

முற்பகல் 10–15

- இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகன்/மகள் ஆகியோரின் திருமணங்களுக்கு உதவித் தொகையாக, மணமகனுக்கு ரூ.3000/–மும் மணமகளுக்கு ரூ.5000/–மும் வழங்கப்படும்.

- 60 வயதை அடைந்து மூப்பின் காரணமாக வேலை செய்ய இயலாமல் ஆதாவற்ற நிலையில் உள்ள உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் ரூ.400/– ஓய்வூதியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- விபத்தினால் மரணம் அடைந்தால் ரூ.1 இலட்சம் மற்றும் இயற்கை மரணத்திற்கு ரூ.10,000 வழங்கப்படும். இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு அல்லது இரண்டு கண்களில் பார்வை இழப்பு ஆகியவற்றுக்கு ரூ.1 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு ஆகியவற்றுக்கு ரூ.50,000 வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட இனங்கள் தவிர வேறு காரணங்களால் கடுமையான காயம் ஏற்பட்டு ஏதேனும் உடல் உறுப்பை இழந்தால் ரூ.20,000 உதவித் தொகையாக வழங்கப்படும்.

- ஈமச் சடங்கிற்கு ரூ.2000 உதவித் தொகை வழங்கப்படும்.(மேசையைத் தட்டும் ஒலி)

**கால்நடை வளர்ப்பு**

18. விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களது வருவாயைப் பெருக்குவதே வழியாகும். எனவே விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாயை ஈட்ட வகை செய்யும் கால்நடை வளர்ப்புக்கு இவ்வரசு முன்னுரிமை அளிக்கும். குக்கிராமங்களிலுள்ள கால்நடைகளைப் பேணிப் பாதுகாக்க, அக்கிராமங்களுக்கே நேரடியாகச் சென்று முகாம்கள் மூலம் மருத்துவ வசதிகளை இலவசமாக அளித்திட ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

19. கோழி மற்றும் முட்டை உற்பத்தியில் தமிழகம் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது. இவ்வகையில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பறவைகளினால் ஏற்படும் நோய் குறித்த ஆய்வுக் கூடம் அமைக்கப்படுவதுடன் நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கால்நடை நோய்கள் குறித்த நுண்ணறிவுப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**பாசனம்**

20. காவிரி நதிநீர் ஆணையத்தின் முன்பாக சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களும் தமது வாதங்களை ஏற்கெனவே முன்வைத்து, ஆணையத்தின் மதிப்பீட்டாளர்களின் அறிக்கையின் மீதான கருத்துகளையும் தமிழ்நாடு தாக்கல் செய்துள்ள நிலையில் ஆணையத்தின் தீர்ப்பு மேலும் தாமதமாகாமல், விரைவில் அந்தத் தீர்ப்பைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழகத்தின் தென் மாவட்ட விவசாயிகளுக்கு ஆறுதலாக அளிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக கேரள அரசு புதிய சட்டத் திருத்தம் ஒன்றை செய்திருப்பதற்கு இந்த அரசு பெரிதும் வருந்துவதுடன், நமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேறு வழியின்றி நாம் உச்ச நீதிமன்றத்தையே நாடியுள்ள நிலையில், கேரள அரசு தனது நிலையினை மாற்றிக் கொண்டு நியாயத்தை உணர்ந்து நடக்க முன்வர வேண்டுமென்று தென் மாவட்ட விவசாயிகளின் சார்பில் வலியுறுத்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

21. ரூ.3900 கோடி மதிப்பீட்டில் பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும், மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மைத் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்தவும் பல்நோக்கு திட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் ஆண்டில் 16 துணை வடிநிலப் பகுதிகளில் பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

22. தமிழகத்தின் ஆறுகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் தூர்வாரி செப்பனிட்டு நவீனப்படுத்தும் பணியினைத் தொடர் திட்டமாக நிறைவேற்றுவோம்.

23. தொடர் மழை ஏற்படும் காலங்களில், சென்னை மாநகரில் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் வெள்ளத்தால்





பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் கூவம், அடையாறு, கொசத்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், பள்ளிக்கரணை சதுப்பு நில ஏரி ஆகியவற்றின் வழியாக வெள்ள நீர் சீராகக் கடலில் கலக்க வகைசெய்யும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூ.279.01 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ள ஆவன செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) .

*முற்பகல் 10–20*

24. திருச்சி புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள கோரையாறு, உய்யக்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு மற்றும் அரியாறு ஆகியவற்றில் தொடர் மழையின் போது ஏற்படும் வெள்ள நீரும் அதே சமயத்தில் காவிரியில் பெருகும் வெள்ள நீரும் சேர்ந்து எளிதில் வடிய முடியாமல் நகர்ப் பகுதிகளில் தேங்கி பொதுமக்கள் அவதியுறும் நிலை உள்ளது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, வெள்ளம் வரும் காலங்களில் வெள்ள நீரின் பெரும் பகுதியைத் தடுத்துத் திருப்பி, தெற்கேயுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகள் பயன்பெறும் வகையில் கால்வாய்கள் மூலம் ஏரிகளை நிரப்பி, எஞ்சிய உபரி நீரை அக்கினியாற்றில் கொண்டு சேர்க்கும் திட்டம் ஒன்றினை ரூ.295 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

25. மதுரை மாநகரில் வைகை ஆற்றினை ஒட்டியுள்ள செல்லூர் ஏரி, பரவை ஏரி, தத்தனேரி, ஆனையூர், முடக்கத்தான் குளம் ஏரிகள், அவற்றின் கால்வாய்கள் மற்றும் சாத்தியாறு ஓடை ஆகியவற்றின் வெள்ளநீரை வைகையில் வடிக்கும் வண்டியூர் குளம் மற்றும் அதைச் சார்ந்த ஏரிகள், தொடர் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் மதுரை மாநகரின் பல பகுதிகளை வெள்ளத்தால் பாதிப்படையச் செய்கின்றன. வெள்ள நீரை வடிக்கும் கால்வாய்களை தூர்வாரி சீரமைத்துக் கரைகளை உயர்த்தி, வெள்ளநீரை வைகை ஆற்றில் சேர்க்கவும், புதிய மழை நீர் வடிகால்களை அமைக்கவும் ரூ.12 கோடி மதிப்பீட்டில் ஒரு வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

26. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1996 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டமான, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள 58 கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதி பெறும் திட்டம் மற்றும், 1999 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள 18 ஆம் கால்வாய்த் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகளை முடிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

27. கோவைப் பகுதியைச் சார்ந்த “சிறு துளி” தன்னார்வத் தொண்டு நிறுவனம் நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் செய்துள்ள நீர்நிலை மேம்பாட்டுப் பணிகள் பாராட்டத்தக்கன. மழைநீர் சேகரிப்பு, பாசனக் குளங்களைச் சீரமைத்தல், ஆறுகளில் மாசகற்றல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் “சிறு துளி” போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இவ்வரசு நல்லாதரவும் ஊக்கமும் அளிக்கும். இது போன்ற தன்னார்வத் தொண்டினை மாதிரியாகக் கொண்டு நீர்நிலை மேம்பாட்டுப் பணிகள் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் அரசின் சார்பில் ஆக்கப்பூர்வமாக நடத்தப்படும்.

28. இந்திய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்வதோடு, முதற்கட்டமாகத் தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை உருவாக்கிடப் பாடுபடுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

## பொது விநியோகத் திட்டம்

29. ஏழை எளியவர்களைப் பசிப்பிணியிலிருந்து பாதுகாக்கும் திட்டமாக விளங்கும் பொது விநியோகத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவதுடன் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் இவ்வரசு பொறுப்பேற்ற அன்றே இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி கிலோ ஒன்று ரூபாய் இரண்டு என்ற விலையில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1950 கோடி உணவு மானியமாக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

30. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முறைகேடுகள் செய்வோர் மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்பால் இந்த அரசு காட்டும் பொறுப்புணர்வுக்கு மாறாக; அரிசி போன்ற உணவுப் பொருட்களைக் கடத்தி அப்பாவி ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் கொள்ளையர்கள்மீது; மணல் திருடர்கள்மீது பாயும் குண்டர் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## உள்துறை

31. “மழலைக் குழந்தையின் மவுன மொழியில் – எந்த
மத பேதத்தைக் க்ண்டது அந்தக் குண்டு?
பின் எதற்காக
மரணப் படுகுழியில் அந்த மலர்களைக் கொட்டி
மூடியது இன்று?
மன ரணம் இனி ஆறுவதுதான் என்று?”

என நமது கலைஞர் அவர்கள் கவிதைமூலம் எழுப்பும் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாத பயங்கரவாதம் உலகத்தையே அச்சுறுத்தி – நாகரிகம், பண்பாடு, மனிதநேயம் ஆகிய முற்போக்குக் கூறுகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வரும் கொடுமையை நாம் கண்டு வருகிறோம். மும்பையில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பு – அதன் விளைவாக சுமார் இருநூறு அப்பாவிகள் பலியான நெஞ்சத்தைப் பதைபதைக்க வைக்கும் நிகழ்ச்சிகள் நமது நாட்டின் சரித்திரத்தில் மாறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பயங்கரவாதத்தைக் கண்டிப்பதுடன் – பலியானோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்பகல் 10–25

32. 1969 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு திரு. ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்திய மாநிலங்களிலேயே முதல் முறையாக “போலீஸ் கமிஷன்” ஒன்றை அமைத்து – அந்தக் கமிஷன் வழங்கிய 133 பரிந்துரைகளில் ஊதிய உயர்வுகள் உட்பட 115 பரிந்துரைகளை உடனே ஏற்று நடைமுறைப்படுத்தியது. 1989 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக

கழக அரசு அமைந்த போது முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்களுடைய தலைமையில் இரண்டாவது "போலீஸ் கமிஷன்" அமைக்கப்பட்டு – அந்தக் கமிஷன் வழங்கிய 112 பரிந்துரைகளில் 87 பரிந்துரைகள் மீது முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

33. இவ்வாறு கழக ஆட்சிக் காலத்தில் காவலர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளைச் செய்ய இரண்டுமுறை போலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட்டதைப் போலவே, காவலர் குறை தீர்க்க, காவல் துறை மேலும் வலிவும் பொலிவும் பெற மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைப்பதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

34. எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் அன்றாடம் நடந்துவரும் சாலை விபத்துகளும், அவற்றில் ஏற்படும் மனித உயிர் இழப்புகளும் நமது மனதில் கலக்கத்தையும் பெருங்கவலையையும் உருவாக்கி வருகின்றன. சாலை விபத்துக் கொடுமைகளைத் தடுப்பதற்கு இந்த அரசு பின்வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதியிருக்கின்றது:–

- மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவதை முற்றிலும் கட்டுப்படுத்த சுவாசப் பரிசோதனைக் கருவிகளை காவல் துறையினர் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். வாகன ஓட்டிகள் குடிபோதையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கவும், ஓட்டுநர் உரிமத்தையே ரத்து செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- பெரும்பாலான சாலை விபத்துக்களுக்கு ஓட்டுநர்களே காரணம் என்பதால் அவர்களுக்கு அவ்வப்போது காவல் துறையும் போக்குவரத்துத் துறையும் இணைந்து தேவையான மறு பயிற்சிகள் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

- நெடுஞ்சாலைகளில் "ஹலோஜன்" விளக்குகளையும், கண்கூசும் பிரகாசமான விளக்குகளையும் பயன்படுத்துவதால், பயங்கர விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே அனைத்து வாகனங்களிலும் முகப்பு விளக்குகளின் நடுவில் கறுப்பு வண்ணம் பூசுவது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும்.

35. மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். கடந்த இரு மாதங்களாக கள்ளத்தனமாக





மணல் அள்ளுதல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசியைக் கடத்துதல் போன்ற குற்றங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36. இந்நிதியாண்டில் காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டம் ரூ.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், காவல் துறைக்கான கட்டடங்கள் கட்டுதல், குடியிருப்புகள் அமைத்தல், காவல் துறையினருக்கு நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு இத்தொகை செலவிடப்படும்.

37. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ரூ.23 கோடி மதிப்பீட்டில் சிறப்பு வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வண்டிகள் வாங்கப்படும். தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயணைப்பு உடைகள் மற்றும் ரசாயன கவச உடைகளுடன் கூடிய மூச்சுக்கருவிகள் வழங்கப்படும்.

## நீதித் துறை

38. நீதித் துறைக்கும் அரசின் நிர்வாகத் துறைக்கும் இடையே ஆரோக்கியமான அணுகுமுறை உருவாவதற்கு இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளைப் பத்திரிகைகள் பாராட்டியுள்ள நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். உதாரணமாக நீதித் துறையின் அத்தியாவசியத் தேவையாக சுட்டிக்காட்டப்பட்ட பணியாளர்கள், கட்டடங்கள், இட வசதிகளைப் பெருக்குவதற்கான மனைகள் போன்ற தேவைகள், நீண்டகாலமாக நிறைவேற்றித் தரப்படாமல் இருந்தவை, இந்த அரசு பதவியேற்ற பிறகு நிறைவேற்றப்பட்டு வருவதைக் கூறலாம்.

39. சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள தமிழ்நாடு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கான அரசாணை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர்களுக்காக தனியாக ஒரு கட்டடம் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் உயர் நீதிமன்ற வளாகத்திலேயே கட்டப்படும். மணமுறிவு வழக்கு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்க, குடும்ப நல நீதிமன்றங்கள் ஒவ்வொன்றிலும் இரு முழுநேர ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர். நீதித்துறைக்குத் தேவையான கட்டடங்கள் மைய அரசின் நிதி உதவியுடன் படிப்படியாகக் கட்டப்படும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளைக்குத் தேவையான 3.50 பணி

இடங்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும். நீதி நிர்வாகத்திற்காக 2006–2007ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.212.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10–30

## தமிழில் கல்வி

40.தேர்தல் அறிக்கையைத் தொடர்ந்து ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, "தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை" என்ற நாணமுறும் நிலையைப் போக்க நம் தமிழ் மொழியை, பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இது வரும் ஆண்டுகளில் படிப்படியாக பத்தாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும்.

## பள்ளிக் கல்வி

41. இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள 7635 ஆசிரியர் பணியிடங்களை, காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்ப அரசு ஆணையிட்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றிய சுமார் 45,987 ஆசிரியர்களுக்கு 1-6-2006 முதல், காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இனி வரும் காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏற்படும் ஆசிரியர் காலியிடப் பணியிடங்கள் காலமுறை ஊதிய அடிப்படையிலேயே நிரப்பப்படவேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

42. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக வெளிப்படையான கலந்தாய்வுமுறை வாயிலான பொது மாறுதலுக்கான வழிகாட்டும் நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2006–2007ஆம் கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் நடைமுறைப்படுத்தப்பட்டு ஆசிரியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.





ஆசிரியர்களுக்கான மாறுதல்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஒளிவுமறைவற்ற கலந்தாய்வுமுறையினை அரசுத் துறைகள் அனைத்திற்கும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

43. தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு தமிழ்நாட்டில் கல்லாமை இருளை நீக்கப் பள்ளிகள் பல திறந்து மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளை 'கல்வி வளர்ச்சி நாள்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையைச் சட்டமாக்குவதற்கு இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஜூலை 15 ஆம் நாளன்று பள்ளிகளில் விழா எடுத்து காமராஜர் திருவுருவப் படத்தை அலங்கரித்து மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். அந்நாளிலிருந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கு வாரத்திற்கு இரு முட்டைகள் வழங்கும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

44. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மாணவர்கள் இலவச பஸ் பாஸ் திட்டத்தையும் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல காரியங்களை எந்த அரசு செய்தாலும், கலைஞர் தலைமையிலான அரசு, அதனை கட்சிக் கண்ணோட்டத்துடன் கைவிட்டு விடாமல் செயல்படுத்தும் என்பதற்கு இதுவும் ஒரு தக்க எடுத்துக் காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

45. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1999–2000 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்ற பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும்போதே மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள், வாழ்விடச் சான்றிதழ்கள், குடும்ப வருமானச் சான்றிதழ்கள் ஆகியன வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைகு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

46. மத்திய அரசின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வித் திட்டம் ரூ.723.18 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக மாநில அரசின் பங்காக ரூ.180.80 கோடி இத்திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறைக்கு இத்திருத்த வரவு–செலவுத்

திட்டத்தில் மொத்தம் ரூ.5438.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## உயர் கல்வி

47. பொறியியல் கல்லூரிப் படிப்புகளுக்கான சேர்க்கை முறையில் கடந்த ஆண்டுகளில் நிலவி வந்த குழப்பத்தை அகற்றி, ஒற்றைச்சாளர முறையில் முன்பிருந்த 39,000 இடங்களைவிட, இப்போது கூடுதலாக 13,000 இடங்களைப் பெற்று, மொத்தமாக 52,000 இடங்கள் மாணவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது இந்த ஆண்டு சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

48. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடியும்; ஆளுநர் உரையில் தெரிவித்தவாறும் தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வை வரும் 2007-2008 ஆம் ஆண்டு முதல் அகற்றிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வியாளர்கள் கொண்ட குழு ஒன்றினை இந்த அரசு அமைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

49. தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு கடந்த காலத்தில் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பல மடங்காக உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணத் தொகையைக் குறைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதைப் போன்றே, ஏழை எளிய மாணவர்களின் கல்விச் செலவைக் குறைக்கும் வகையில், அரசுப் பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்பட்டு வரும் அனைத்துப் பாடப் பிரிவுகளையும் பொதுவகைக் கட்டணம் செலுத்தும் பாடப் பிரிவுகளாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

50. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்விக்கான தேவை பெருகி வருவதாலும்; அக்கல்வியில் தனிச்சிறப்பு மிக்க உயர் பட்டப் படிப்புக்கான அவசியம் வளர்ந்து வருவதாலும், சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தைப் போன்ற தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களை திருச்சியில் ஒன்றும், கோவையில் ஒன்றுமாக நிறுவிடவும் – பின் தங்கிய பகுதிகளின் கல்வி



வளர்ச்சிக்காகக் கோவை மாவட்டம் வால்பாறையிலும், சேலம் மாவட்டம் மேட்டூரிலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கிடவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

51. ஜூலை 15 ஆம் நாள் காமராஜர் பிறந்த நாள் விழாவில் முதலமைச்சர் அறிவித்தவாறு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள கல்வியியல் ஆய்வு மையம் (Centre for Educational Research) ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

52. கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர் விரைவாக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கேற்ற வழி வகைகளை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் – ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் (Colleges of Physiotherapy) அமைந்திடத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

53. திராவிடத் தலைவர்கள் பிட்டி. தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டு வழி நடத்தப்பட்ட நீதிக் கட்சி ஆட்சியில் 1923 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட "Madras University Act, 1923" என்ற சட்டம்தான் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு இன்று வரையிலும் உறுதி மிக்க சட்டமாக இருந்து வருகிறது. உயர் கல்விக்கு நீதிக் கட்சி அளித்த கொடை என்றே இச்சட்டம் அழைக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்கல்வி பெறுவதற்கும், பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களாக இடம் பெறுவதற்கும் முதன் முதலில் நீதிக் கட்சி ஆட்சிதான் வழிவகுத்துக் கொடுத்தது என்பது சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ள சான்று.

54. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேரூன்றிய திராவிடர் இயக்கம் இன்று வரையில் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் பல ஏற்றம் தரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது என்ற உண்மைய வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் – திராவிட இயக்க வரலாறு, அதன் தொடர்பான அரசியல் – சமூகச் சிந்தனைகள், சீர்திருத்தங்கள், சமூக – பொருளாதாரக் கொள்கைகள், சட்ட திட்டங்கள், மொழி வளர்ச்சி போன்றவற்றைப் பற்றி உயர்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாகவும், எதிர்காலத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்திடும் வகையிலும்;

சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழா நடைபெற இருப்பதையொட்டி; சென்னைப் பல்கலைக் கழகத்தில், பல்கலைக்கழக வளாகத்திலேயே "திராவிட இயக்க ஆய்வு மையம்" (Centre for Research on Dravidian Movement) ஒன்றினை நிறுவிட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன்

55. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் "வருமுன் காப்போம்" என்ற பெயரில் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட குழுக்களின் வாயிலாக இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, நடப்பு ஆண்டிலும் வரும் ஆண்டிலும் 9000 இலவச மருத்துவ முகாம்கள் மாநிலமெங்கும் நடத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.11.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

56. தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, 235 அரசு மருத்துவமனைகளில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இம்மருத்துவமனைகளுக்குத் தேவையான கருவிகள் மற்றும் நவீன மருத்துவச் சாதனங்கள் ரூ.70 கோடி செலவில் வழங்கப்படும். மேலும், அவசர காலங்களில் நோயாளிகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு சேர்க்கும் சேவைகளை அளிக்கும் வகையில் 14 மாவட்டங்களிலுள்ள கிராமப் பகுதிகளுக்கு 108 அவசர ஊர்திகள் வழங்கப்படும். 32 அரசு மருத்துவமனைகள் 24 மணி நேர அவசர மற்றும் சிசுக் கவனிப்பு மையங்களாக தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

57. ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக வசதிகளை மேம்படுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள 1417 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செமி ஆட்டோ அனலைசர் கருவிகள் ரூ.17 கோடி செலவில் வழங்கப்படும். மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மற்றும் ஓமியோபதி மருத்துவ சிகிச்சை பிரிவுகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக ரூ.174.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





58. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் ரூ 5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். நோய் கண்டறியும் நவீன MRI ஸ்கேன் வசதிகள் மாநிலமெங்கும் எளிதில் கிடைத்திடும் வகையில் திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோவை மற்றும் வேலூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் 23.95 கோடி செலவில் MRI ஸ்கேன் மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை பொது மருத்துவமனையில் அதிநவீன 64 Slice CT Scanner ரூ.5.50 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தால் அமைக்கப்படும்.

59. மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தற்கிணங்க, விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## தொழில் வளர்ச்சி

60. தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக ஆக்கிட இந்த அரசு இடையறாது பாடுபடும். புதிய அரசு பொறுப்பேற்றுள்ள இந்தச் சில நாட்களுக்குள்ளாகவே மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும்; தமிழகத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சர்வதேசச் சந்தையில் தரத்திலும் விலையிலும் போட்டியிடக்கூடிய அளவிற்கு மேம்படுத்தவும்; அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்; மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் தொழில்துறையில் வளர்ச்சி அடையவும்; மாநிலத்தில் உள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளைக் கலந்தாலோசித்து ஒரு புதிய தொழில் கொள்கை நடப்பு ஆண்டிலேயே அறிவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் முன்னணித் தொழில்களாக விளங்கும் தோல்பதன மற்றும் தோல் பொருட்கள் தொழில், துணித் தொழில், மோட்டார் வாகன உற்பத்தித் தொழில் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொழில் (Electronic Hardware) ஆகியவற்றை ஊக்குவித்து வலுப்படுத்திடும் வண்ணம் இந்த அரசின் தொழில் கொள்கை வகுக்கப்படும்.

61. தொழில் மற்றும் வர்த்தகத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும், தொழில்கள் தங்கு தடையின்றி வளர்வதற்காகவும்

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறப்புக் குழு (Special Task Force) ஒன்று அமைக்கப்படும்.

62. மாநிலத்தில் சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை (Industrial Corridor of Excellence) ஒன்றினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு பெருவழிச்சாலையில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு, அவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கப்படும். இச்சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை உலகத்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியுடன் அமையும்.

63. இந்தியப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் 2–7–2005 அன்று மதுரையில் நடைபெற்ற சேது சமுத்திரம் திட்டப் பணிகள் தொடக்க விழாவில் – அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் – கலைஞர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று தமிழகத்தில் 400 கோடி ரூபாய் செலவில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் (National Automotive Testing and Research and Development Infrastructure Project) ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதற்கென சென்னைக்கருகில் ஒரகடம் என்னுமிடத்தில் வாகனச் சோதனை மையம் அமைவதற்குரிய சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அந்த மையம் நிறுவப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

64. வேளாண்மைத் துறையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மருத்துவத் துறையில் பல்வேறு நோய்களுக்கு புதிய மருந்துகளை கண்டறியவும் பெரிதும் பயன்படும் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை இவ்வரசு அமைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

65. தமிழ்நாட்டில் கணினி பயன்பாட்டை அதிகரிக்கவும், கணினியை எல்லோரும் எளிதில் வாங்கக்கூடிய நிலையை உருவாக்கவும் தமிழகத்தில்



நிறுவ முன்வரும் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ரூ.100 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் கணினித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் கணினிகளின்மீது விதிக்கப்படும் பொது மற்றும் மத்திய விற்பனை வரியிலிருந்து உச்சவரம்பின்றி விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலுகை இந்தத் தொழிற்சாலைகள் வணிக ரீதியாகச் செயல்படும் ஆண்டிலிருந்து பத்தாண்டுகளுக்கு அளிக்கப்படும்.

66. தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள தென்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். இந்தக் குறிக்கோளுடன், முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு மத்திய அரசால் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டது. இங்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் வண்ணம், இந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா திட்டத்தை உயிரூட்டிச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

67. தமிழக மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கிடும் வண்ணம் – இப்பொழுது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சேலம் உருட்டாலையை சர்வதேச அளவுக்கு உயர்த்திட புதிய குளிர் உருட்டு ஆலை (Cold Rolling Mill) அமைத்திட 1553 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ள மத்திய அரசின் நடவடிக்கையை நாம் நன்றியுடன் பாராட்டி வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

## தகவல் தொழில்நுட்பம்

68. மென்பொருள் தயாரிப்பில் பல்லாயிரக்கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைப் பணிகளில் இலட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பைத் தரவல்லதாகத் தகவல் தொழில்நுட்பத் துறை விளங்குகிறது. இத்துறைக்கு இவ்வரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து ஒரு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையினை வகுக்கும். அரசுத் துறைகளில் மின் ஆளுமையைச் செம்மையாகச் செயல்படுத்தி மக்களுக்கு நல்ல முறையில் சேவைகளை அளிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மக்கள்

அன்றாடம் அணுகும் பத்து முக்கியத் துறைகளில் மின் ஆளுமைத் திட்டம் முடுக்கி விடப்படும்.

69. முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சென்னை தரமணியில் பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்கள் அமைந்திடுவதற்கேற்ற வகையில் உலகத் தரத்திலான "டைடல்" பூங்கா நிறுவப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது "டைடல்" பூங்கா சென்னையில் அமையுமென்று முதலமைச்சர் கலைஞர் அப்போது அறிவித்தார். அதன்படி, சென்னை தரமணியில் தற்போது இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

70. 15–6–2006 அன்று தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள விப்ரோ மற்றும் இன்போசிஸ் நிறுவனங்களுக்கு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருடன் நேரில் சென்று பார்வையிட்டு விவாதித்ததன் அடிப்படையில்; தமிழ்நாடு அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனமும் இணைந்து, சென்னையில் உள்ள "டைடல்" பூங்கா போன்றதொரு அமைப்பினைக் கோவையில் உருவாக்குவது பற்றியும்; இன்போசிஸ் நிறுவனம் அடுத்த மூன்றாண்டுகளில் சென்னையில் 1250 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்து, 50 இலட்சம் சதுர அடிகள் கொண்ட மென்பொருள் நிறுவனத்திற்கான கட்டடங்களைக் கட்டி, 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

71. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை – தகவல் தொழில் நுட்பம், வடிவமைத்தல் உள்ளிட்ட உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையத்தை (National Centre of Excellence - Indian Institute of Information Technology, Design and Manufacturing) – சர்வ தேசத் தரத்தில் சென்னையில் அமைத்திட முடிவு செய்துள்ளது. அதன்படி 2003 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசிடம் நிலம் ஒப்படைக்கப்படாமலும், முடிவெடுக்கப்படாமலும் இருந்ததால், கட்டடப் பணிகள் முடிந்து இக்கல்வி நிறுவனம் தொடங்கப்படுவது தாமதப்பட்டு வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு அமைந்தவுடன் முக்கியமான இந்த நேர்வில் – தேவையான நிலத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கவும்,



உரிய ஒத்துழைப்பினை நல்கி இணைந்து செயல்படவும் – முடிவெடுத்து அறிவித்துள்ளது.

72. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்வது குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் அளிக்க இத்துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில தகவல் தொழில்நுட்பக் குழு (State Information Technology Task Force) ஒன்று அமைக்கப்படும்.

*முற்பகல் 10–50*

73. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக்களையொட்டி இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செப்டம்பர் திங்கள் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போது முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு செலவாகும் தொகை அன்னியில் இத்திட்டத்திற்கு இந்த நடப்பாண்டிற்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்படும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

74. இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும் குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் தலைமையிலான இக்குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு டி. சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சி. கோவிந்தசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. கு. செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு. எச். அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் திரு. பூவை மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு 27–6–2006 அன்று கூடி, இத்திட்டத்தை துவங்கிவைக்க முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி (International Open Competitive Bidding) முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேசிய ஒப்பந்தப் புள்ளிகள் 24–7–2006–க்குள் பெறப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படும். முதற்கட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், சமத்துவபுரம் இதுவரை அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில் அங்குள்ள மலைவாழ் பழங்குடி குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றுமாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்திலுள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறு மற்றும் குறுந்தொழில்கள்**

75. ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஆற்றி வரும் முக்கியப் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில்வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறியத் தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் மேம்பாடு**

76. சாலைகளை நன்கு பராமரிக்கவும், போக்குவரத்து அதிகமாக உள்ள நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், பழைய பாலங்களைப் புதுப்பிக்கவும், புதிய பாலங்கள், குறிப்பாக இரயில்வே மேம்பாலங்கள் கட்டவும் இந்த அரசு தலையாய முன்னுரிமை அளிக்கும்.

77. சாலைப் பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.804 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும்,



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

சாலைகள் மற்றும் பாலங்களுக்கான மூலதன ஒதுக்கீடுகளுக்கென ரூ.2161 கோடி என்ற உயர் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகளில் பெருகி வரும் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு 2664 கி.மீ நீளமுள்ள முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும். மேலும், 3812 கி.மீ நீளமுள்ள இதர மாவட்டச் சாலைகள் முக்கிய மாவட்டச் சாலைகளாக மாற்றப்படும். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு அறிவித்துள்ள பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 1122 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள் தரம் உயர்த்தப்படும்.

முற்பகல் 10–55

78. மதுரை மாநகரப் பகுதியின் போக்குவாத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு மதுரை ஆரச்சாலையின் இரண்டாவது கட்டப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். பின்னலாடைத் தொழிலில் ஆண்டுக்கு ரூ.8000 கோடிக்கும் அதிகமாக ஏற்றுமதி செய்து சாதனை படைத்து வரும் திருப்பூர் நகரத்தின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, ரூ.70 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் நகரத்தின் வட்டச்சாலை மற்றும் அணுகு சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். திண்டிவனத்திலிருந்து திருச்சி வரையிலான தேசிய நெடுஞ்சாலையை ரூ.1260 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக மாற்றும் திட்டப் பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளன.

**மின் சக்தி**

79. தடையற்ற தரமான மின்சாரத்தை வழங்குவதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நிறுவு திறன் 10,011 மெகாவாட்டாகும். இந்த ஆண்டில் 749 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டு இந்த ஆண்டு இறுதியில் மொத்த உற்பத்தி நிறுவு திறன் 10,760 மெகாவாட் ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடங்குளம் அணுமின் திட்டத்தின் முதல் பிரிவு இந்த ஆண்டிலும் இரண்டாம் பிரிவு அடுத்த ஆண்டிலும் செயல்படத் தொடங்கும். மேலும் கூடங்குளம் அணுமின் திட்டத்தில் 2000 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது மற்றும் நான்காவது உற்பத்தி அலகுகளை விரைவில் செயல்படுத்த மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில்,

1000 மெகாவாட் திறனுடைய ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் செயல்படுத்த இவ்வரசு இசைந்துள்ளது.

80. ஊரகப் பகுதிகளில் தடையின்றித் தரமான மின்சாரம் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் நடப்பு ஆண்டில் ரூ.195.54 கோடி மதிப்பீட்டில் மின்பகிர்மானத் திட்டங்களை மேற்கொள்ளும். இதற்காக, ஊரகப் பகுதிகளில் 25 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 2706 புதிய மின் பகிர்வு மின் அழுத்த மாற்றிகள் நிறுவப்படும். 24 துணை மின் நிலையங்களில் மின் அழுத்த மாற்றிகளின் திறன் அதிகரிக்கப்படும்.

81. முதலமைச்சர் கலைஞரின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார திட்டம் விரிவுபடுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி சுயநிதித் திட்டத்தின் கீழ் சிறப்புத் தொகை கட்டி மின் இணைப்பு பெற்ற இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் விவசாய மின் இணைப்புகளுக்கும் இனி இலவச மின்சாரம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

82. விவசாய மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கும் வீட்டு மின் இணைப்புகளுக்கு குறைந்த கட்டண வீதத்தில் மின்சாரம் வழங்குவதற்கும் கிராமப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு இலவச மின்வசதி வழங்குவதற்கும் மாநில அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்கி வருகிறது. இந்த வரவு–செலவு திட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக ரூ.1530 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

83. பயணியர் நலன் கருதி, நடப்பாண்டில் 1000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

84. 1997ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற மினிப் பேருந்து திட்டத்தை, தொடர்ந்து கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் விரிவுபடுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது.





85. அண்மைக்காலமாக நமது நாட்டில் விமானப் போக்குவரத்தின் தேவை அதிகமாகி, அதன் காரணமாக, பெரும் எண்ணிக்கையில் விமானிகளுக்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இத்தேவையைப் பூர்த்தி செய்யவும், விமானவியல் துறையில் உயர்கல்வி அளிக்கவும், முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அறிவித்தவாறு, மறைந்த பாரதப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் நினைவாக (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பெரும்புதூரில் 'ராஜீவ் காந்தி விமானவியல் உயர்கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி' ஒன்று அமைக்கப்படும். இது பற்றி மத்திய விமானப் போக்குவரத்துத் துறையோடு தமிழக அரசு தொடர்பு கொண்டுள்ளது.

86. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் ஒரு பெரிய துறைமுகம் (Major Port) அமைப்பதற்குச் சாதகமான சூழல் இயற்கையிலேயே இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும் இச்சமயத்தில், கிழக்கு மேற்கு ஆசிய நாடுகளை இணைக்கும் முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடத்தில் மிகவும் தேவைப்படும் சரக்கு மாற்றும் துறைமுகமாக அமையும் வகையில் குளச்சலில் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

## சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்

87. சென்னை மாநகரத்தில் வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளுக்கு மெட்ரோ இரயில் திட்டமே சரியான தீர்வாக அமையும் என்பதால் மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. சென்னை மாநகரில் பெருகி வரும் குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கான பல்வேறு தேவைகளைக் கருத்தில் கொண்டு, சென்னைக்கு அருகே துணை நகரங்களை (Satellite Towns) உருவாக்கிட இந்த அரசு கருதியுள்ளது. உரிய ஆயத்தப் பணிகளை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் செய்து வருகின்றன.

88. சென்னை மாநகரில் அதிகரித்துவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப தேவைப்படும் மின்வசதி, சாலை வசதிகள், குடிநீர், கழிவு நீர் மற்றும் மழை நீர் வடிகால் ஆகிய அடிப்படை வசதிகளை உருவாக்கும் பொருட்டு ஒரு பெரும் திட்டம் (Master Plan) வகுக்கப்படும்.

## நகராட்சி நிர்வாகம்

89. நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு KfW என்னும் ஜெர்மானிய அரசு நிதி நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடனுதவி பெறக் கருதப்பட்டுள்ளது.

90. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் நகர்ப் பகுதிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் ரூ.110 கோடி மதிப்பீட்டில் செய்து கொடுக்கப்படும்.

91. சேலத்தின் மையப் பகுதியில் ஓடும் திருமணிமுத்தாற்றை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி அழகுபடுத்தும் திட்டம் வகுக்கப்பட்டு, ரூ.5 கோடி மதிப்பீட்டில் 1996–2001 ஆண்டுகளில் முதல் கட்டமாக 1.5 கி.மீ நீளத்திற்கு மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது கட்டமாக; திருமணிமுத்தாறு மற்றும் இதில் கலக்கும் வெள்ளக்குட்டை ஆறு ஆகியவற்றை 5.06 கி.மீ நீளத்திற்கு சீரமைக்க ரூ.31.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து (TNUDF) நிதியுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

92. ஆசிய அளவில் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம் முன்னணி இடத்தை வகிக்கின்றது. இந்நகரின் பிரமிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை செம்மையான முறையில் அளிக்கும் வகையில் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

93. ஜப்பானிய விஞ்ஞானிகள் கிருமிகளைப் பயன்படுத்தி, கழிவுகளை அகற்றுவதில் வெற்றி கண்டுள்ளனர். இவ்வகைக் கிருமிகள், திறன்மிக்க கிருமிகள் (Efficient Microbes) என்று அழைக்கப்படுகின்றன. EM என்னும் இக்கிருமிகளின் உணவே கழிவுதான் என்பதால், இம்முறையைப் பயன்படுத்தி கழிவு நீரால் மாசுபட்டுள்ள நீர் நிலைகள், ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றைச் சுத்தப்படுத்த சோதனை ரீதியில் ஒரு முன்னோடித் திட்டத்தை (pilot scheme) மேற்கொள்ள அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## குடிநீர் வழங்கல்

94. தமிழ்நாட்டில் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், 55,149 ஊரகக் குடியிருப்புகளில் வசிப்போர் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 40





லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறும் நிலை உள்ளது. இக்குடியிருப்புகள் அனைத்தும் மூன்று ஆண்டுகளில் முழுமையான குடிநீர் வசதி பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீர் வசதி பெறாத 968 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் ரூ.111 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

95. குடிநீரில் ப்ளோரைடு அதிகமாக உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு ஒரே தீர்வான ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் திட்டத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டம் தொடர்பாக 17–7–2006 அன்று இவ்வங்கியின் உயர் அலுவலர்கள் முதல் அமைச்சரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

96. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் பல ஆண்டுகளாக நிலவி வரும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, காவிரி நீரை கொண்டுவந்து வழங்கும் 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பெரும் திட்டத்தின் பணிகள் இந்த ஆண்டு தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

97. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, வாரியத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையே போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளில் அரசுக்கும் வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களைச் செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின் மத்திய அரசின் சாத்தியத்திற்கான நிரவல் நிதி உதவி (viability gap funding) முறையின்கீழ் நிதி உதவி கோரப்படும்.

முற்பகல் 11–05

98. மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிதி உதவியைப் பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்படும்.

## உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு தேர்தல்கள்

99. மக்களாட்சி மாண்பிலும், அதிகாரப் பரவலிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும், மிகுந்த ஆர்வமும் கொண்டுள்ள இந்த அரசு உரிய காலத்தில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையான தேர்தல்களை நடத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

100. ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் விரைவில் நடத்திட சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## குடிசைப் பகுதி மேம்பாடு

101. பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசால் வழங்கப்படும் ரூபாய் 250 கோடி நிதி உதவியின் மூலம் குடிசைப் பகுதிகளில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

## ஊரக வளர்ச்சி

102. ஊரகப் பகுதிகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இவ்வரசு மிகுந்த முனைப்புடன் செயல்படும். கிராமங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் வரும் ஐந்து ஆண்டுகளில் உருவாக்குவதற்காக ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்த "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை" மீண்டும் "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற பெயரால் செயல்படுத்துவது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ரூ.500 கோடி அரசு நிதியுதவி அளிக்கப்பட்டு 2500 ஊராட்சிகளில் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு ஆண்டு ஒன்றுக்கு 2,500 ஊராட்சிகள் வீதம் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே உள்ள 12,618 ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் முழுமை அடையும். தற்போது மாநிலத் திட்டத்திலிருக்கும் பல்வேறு திட்டங்களை ஒருமுகப்படுத்தி கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் இப்புதிய திட்டம் செயல்படுத்தப்படும். தனிநபர் வருமான அடிப்படையில் மிகவும் நலிந்துள்ள ஊராட்சிகளில் முதல் ஆண்டிலும், எஞ்சியுள்ள



ஊராட்சிகளில் வருமான ஏறுமுக அடிப்படையில் வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

103. மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்துள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நமது மாநிலத்தில் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பங்குபெறும் வேலைவாய்ப்பற்ற கிராம மக்கள் ஒரு நாள் பணிக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ.80/–ஐ பெறுவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நீக்கும் வகையில், புதிய ஊரக விலைப் புள்ளிகள் அட்டவணைக்கு (Rural Schedule of Rates) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்திட்டத்தில் பங்கேற்கும் பயனாளிகள் அனைவருக்கும் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ.80/– கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தமாக ரூ.3212.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள்

104. சுனாமி நிவாரணப் பணிகளுக்கு நிதியாக மத்திய அரசு மூலம் – ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்ற தலைப்பில் 2347.19 கோடி ரூபாயும், உலக வங்கியின் மூலம் 1852.74 கோடி ரூபாயும், ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் 629.64 கோடி ரூபாயும், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 67.50 கோடி ரூபாயும் என மொத்த நிதி ஒதுக்கீடு 4897.07 கோடி ரூபாய் ஆகும். அதில் கடந்த ஆட்சிக்காலத்தில் செலவிடப்பட்ட தொகை 806 கோடியே 38 இலட்ச ரூபாய் ஆகும். அந்தத் தொகை நிவாரணப் பணிகளுக்கு மட்டும் செலவிடப்பட்டு, நிரந்தர வீடுகள் கட்டுதல், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற மறுசீரமைப்புப் பணிகளுக்கென எதுவும் செலவிடப்படாத நிலையில்: 24–6–2006 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்களுடன் சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் நடந்தவை; நடக்கவேண்டியவை குறித்து ஆய்வு செய்தார்கள். ஆய்வின் முடிவில் சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கென இந்த நிதி ஆண்டில் மேலும் 1000 கோடி ரூபாய் செலவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

*முற்பகல் 11–10*

## மகளிர் நலன்

105. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை கானல் நீராகவே இருந்து வருகின்றது. முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில் சமச்சொத்துரிமையும், அரசுப் பணிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உரிய ஒதுக்கீட்டையும் அளித்து மகளிர் நலனையும் உரிமையையும் காத்த கலைஞர் தலைமையிலான அரசு, பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு இட ஒதுக்கீடு செய்வதற்கான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை இந்த ஆண்டிலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

106. ஏழை கர்ப்பிணிப் பெண்களின் ஊட்டச்சத்து உணவுக்காகவும், கருவுற்ற காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டும் வகையிலும் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு மகப்பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், மகப்பேறு காலத்திற்குப் பின்னர் 3 மாதங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 6 மாதங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் பேறுகால நிதி உதவி வழங்கிடும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

107. தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, 1–1–2002 முதல் முந்தைய ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி 3–6–2006 முதல் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, இடையில் நுழைந்து ஆதாயம் பெற முனைவோர் யாராயினும் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப்படுவர் என்பதை இந்த அரசு எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

108. 1989–இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதலமைச்சர் அவர்களால் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகளிர் மேம்பாட்டினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இச்சுய உதவிக் குழுக்களுக்குத் தொடர்ந்து தேவையான ஆதரவையும், ஊக்கத்தையும், நிதியையும் வழங்கும். 2006–2007ஆம் ஆண்டில் 5 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

109. திறன் வளர்ப்புப் பயிற்சி பெறுவதன்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வருவாய் ஈட்டும் தொழில்களைத் தொடங்குவதற்கான கடன் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு இப்பயிற்சியில் பங்கேற்கும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்படும் பயிற்சி உதவித்தொகை ரூ.7.50 லிருந்து ரூ.15/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

110. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகள் மேலும் செம்மைப்படும் வகையில் தலைமையகத்திலும், மாவட்ட அளவிலும் தேவையான மாறுதல்களைச் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

111. தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க, முதியோர், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை, ரூ.200/–என்று இருப்பதை ரூ.400 என்று உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2006–2007ஆம் ஆண்டுக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.407.06 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஊனமுற்றோர் நலன்

112. ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும்

மாதாந்திர உதவித்தொகை ரூ.200/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஊனமுற்றோர் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு எண்ணியுள்ளது. ஊனமுற்றோர் வறுமை காரணமாகப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட நேரிட்டால் அவர்கள் தமது படிப்பைத் தொடர அரசு சிறப்புக் கவனம் செலுத்தும். உடல் ஊனமுற்றோர்க்கான காலிப் பணியிடங்களை நிரப்பிட சிறப்புத் தேர்வுகள் நடத்தப்படும். ஊனமுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சியும் சுய தொழில் கடனும் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்படும். கிராமப்புறங்களில் உள்ள ஊனமுற்றோர்க்கு கைவினைத் தொழிலும், சிறு கடையும் நடத்த முன்னுரிமை வழங்கப்படும். ஊனமுற்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிறப்புச் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

*முற்பகல் 11–15*

113. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் – மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெறக்கூடிய கண் பார்வையிழந்த மாணவ மாணவியர்க்குப் பரிசுத் தொகை வழங்குவதுடன்; அவர்களுடைய உயர்கல்விச் செலவையும் அரசே ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

## சத்துணவுத் திட்டம்

114. சத்துணவுத் திட்டத்திற்கு 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.955.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சத்துணவு பெறும் மாணவர்களுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்கும் திட்டத்திற்காக ரூ.40 கோடி கூடுதல் ஒதுக்கீடு இந்த ஆண்டு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## நெசவாளர் நலன்

115. விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதைப் போலவே இலவச மின்சாரம் நெசவுத் தொழில் செய்பவர்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் சொந்தமாகத் தறிக் கூடம் வைத்திருந்து தாமே நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருவார்களேயானால், அவர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படும்.





(மேசையைத் தட்டும் ஒலி) அதே போல விசைத்தறி நெசவாளர்கள் சொந்தமாக தறிக்கூடம் அமைத்து தாமே விசைத்தறி இயக்குபவர்களாக இருந்தால் அவர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 யூனிட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சலுகையினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் இழப்பான ரூ.40.26 கோடியைத் தமிழக அரசு ஈடுசெய்யும்.

116. ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் உற்பத்தி செய்யும் வேட்டி சேலைகளை நலிந்த குடும்பங்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு இலவசமாக வழங்கிடவுமான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சுமார் 62 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன் பெறுவர்.

## அமைப்பு சாராத் தொழிலாளர் நலன்

117. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அமைப்புசாராத் தொழிலாளர் களுக்காக பல்வேறு நலவாரியங்களை அமைத்து, சமூகப் பாதுகாப்பையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கியது. ஆனால் அந்த வாரியங்கள் கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டபடி அமைப்புசாராத் தொழிலாளர்கள் நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம், சலவைத் தொழிலாளர்கள் நலவாரியம், முடிதிருத்துவோர் நலவாரியம், தையல் தொழிலாளர்கள் நலவாரியம், பனைத் தொழிலாளர் நலவாரியம், கைவினைத் தொழிலாளர் நலவாரியம், ஓவியர்கள் நலவாரியம், காலணி மற்றும் தோல் தொழிலாளர் நலவாரியம், கைத்தறி மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர் நலவாரியம் ஆகிய ஒன்பது நல வாரியங்களை மீண்டும் தொடங்கி அவற்றுடன் 10வது நலவாரியம் பொற்கொல்லர்களுக்காகவும் அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்திட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்நலவாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/– ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் நலன்

**118.** இலட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு பல்லாண்டுகளாக காத்திருக்கின்றனர். இவர்களது பொருளாதாரத் தேவையை ஓரளவாவது நிறைவுசெய்யும் பொருட்டு இவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படும் எனத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பதிவுசெய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் படித்த இளைஞர்களில், பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ.150/–ம், மேனிலைப் படிப்பு / புகுமுக வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200/–ம் மற்றும் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு ரூ.300/–ம் மூன்றாண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.110 கோடி அரசுக்கு செலவு ஏற்படும்.

**119.** தேர்தல் அறிக்கையில் கூறியவாறு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை ஒருங்கிணைத்து சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன், அத்தகைய இளைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களின் பயிற்சி மற்றும் உதவித்தொகைக்காக, ரூபாய் பத்து கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11–20*

## மீனவர் நலன்

**120.** மத்திய அரசின் நிதி உதவி பெற்று கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**121.** தற்போது 5000 விசைப்படகுகளுக்கு ஒரு விசைப்படகிற்கு மாதமொன்றுக்கு 1000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அளவினை உயர்த்த வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கையை ஏற்று, இந்த அரசு, 1–8–2006 முதல் 1000 லிட்டர் அளவினை 1500 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தி வரிவிலக்கு அளிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.55 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

122. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், கை விளக்குகள் (Handy Rechargeable Lanterns), மீன்களை எடுத்துச்செல்ல மிதிவண்டிகள் (Heavy Duty Bicycles), உயிர்காக்கும் உடை (Life Jackets), ஐஸ் பெட்டிகள் (Ice Boxes) மற்றும் நிலை அறியும் கருவிகள் (GPS) ஆகியவை ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்ட நிதி உதவியிலிருந்து ரூ.100 கோடி செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

123. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி முன்னேற்றமே அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முக்கியத் தூண்டுகோலாக அமையும் என்பதால், இவ்வரசு அந்த மக்களுக்கு தரமான கல்வியை அளிப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கும் விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விடுதிகள் நன்கு பராமரிக்கப்படும் வண்ணம் சிறப்புப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

124. தற்போது மத்திய அரசு வழங்கி வரும் சிறப்பு மைய உதவி (Special Central Assistance) வாயிலாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தனிப்பட்ட பயனாளிகள் பயன் பெறும் வகையில் வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நிதி ஆதாரங்களை உயர்த்தி, மேலும் கணிசமான அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வருவாய் ஈட்டும் திட்டங்களில் பயன் பெற வழிவகுக்கும் வகையில், சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம் (Special State Assistance) ஒன்றை இந்த அரசு செயல்படுத்தும். இது போன்ற ஒரு திட்டம் தமிழகத்தில் முதன் முதலாகத் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இத்திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

125. "மனிதனை அமர வைத்து மனிதனே இழுத்துச் சென்ற கைரிக்ஷா கொடுமையை ஒழித்து கலைஞர் ஆட்சியில் இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியதைப் போல, மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை நிறுத்தி, அந்தப் பணியினை ஆற்றி வருபவர்களுக்கு தகுதியான வேறு பணி வழங்கப்படும்" என திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி

அளிக்கப்பட்டதற்கேற்ப, அந்தப் பணியில் ஈடுபட்டுள்ள 11,691 நபர்களுக்கு சுமார் 50 கோடி ரூபாய் செலவில் வேறு பணிக்கான பயிற்சி வழங்கவும், மறுவாழ்வு அளித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

126. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனிலும் சமூகநீதி நிலைநாட்டப்படுவதிலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இப்போது மற்றுமோர் எடுத்துக்காட்டாக சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக அரசு உதவி பெறாத அனைத்துத் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களிலும் சமூக நீதி அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் 319.96 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறுபான்மையினர் நலன்**

127. தேர்தல் அறிக்கையில் உறுதியளித்துள்ளவாறு – சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்குக் கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் தனியாக இட ஒதுக்கீடு வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன்; தமிழகத்திலும் அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு, வழி வகுத்திடத் தேவைப்படும் உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரவாணிகள் நலன்**

128. அரவாணிகளின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கான சுய உதவிக் குழுக்கள் அமைப்பது குறித்தும் அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்தும் இந்த அரசு விரைவில் பரிசீலித்து முடிவெடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)



**இலங்கைத் தமிழர்**

129. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது குறித்தும், தமிழகத்திற்கு வருகை தரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்தும் இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இப்பிரச்சினைக்கு விரைவில் சுமூகமான பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டும் என்று இந்த அரசு விழைகிறது.

130. அதிகரித்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கிட ரூ.34.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–25*

131. தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளின் முகாம்களை அமைச்சர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் சென்று பார்த்து செய்த பரிந்துரையின் பேரில் அகதிகள் தற்போது மாதந்தோறும் பெற்று வருகின்ற மத்திய அரசின் நிதி உதவியான 200 ரூபாய் என்பதுடன் தமிழக அரசின் சார்பாக 200 ரூபாய் சேர்த்து மொத்தமாக 400 ரூபாயாக உயர்த்தி வழங்கிட முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையும் இரண்டு மடங்காக உயர்த்தித் தரப்படும்.

**அறிவியல் தமிழ்**

132. இயல், இசை, நாடகம் என வளர்ந்து வளம்பெற்ற தமிழ், இன்றைய அறிவியல் வளர்ச்சிப் போக்கையும், தேவையையும் ஒட்டி அறிவியல் தமிழாகவும் மணம் வீசத் தொடங்கியிருக்கிறது. அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் தமிழ் மொழி உறுதியாகக் கால் பதித்தால்தான் வளர்ந்து வரும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்திட முடியும். அறிவியல் தமிழை வளர்த்திடும் முயற்சிகள் பலரால் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை அனைத்தையும் ஒருங்கிணைக்கவும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிகாணவும் "அறிவியல் தமிழ் மன்றம்" ஒன்றை அமைத்து; அம்மன்றம் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

**தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு**

133. உலகத்தின் மற்ற தொன்மையான மொழிகளோடு ஒப்பிடத் தக்கவகையில் தமிழ் மொழியில் இலக்கிய ஆய்வினை மேற்கொள்வதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உலகத் தமிழ்ச் செம்மொழி ஆய்வு நிறுவனமாக்கி, செம்மொழி ஆராய்ச்சிக்கான மத்திய அரசின் நிதி உதவியினை இந்த நிறுவனத்திற்கு வழங்கிடுமாறு இந்த அரசு மைய அரசை வலியுறுத்தும்.

134. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு வெளியிட்டுள்ள நிலையில், நடப்பு நிதி ஆண்டில் மேலும் 6 பகுதிகள் அச்சிடப்படும்.

135. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் நிதியுதவியினை ரூ.500/– லிருந்து ரூபாய் 1000/– ஆக உயர்த்தி 2006–2007 நிதி ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது.

136. தமிழைச் செம்மொழி என்று அறிவிக்கவேண்டுமென முதல் குரல் கொடுத்தவரும், நூற்றாண்டுகளுக்கு முன்பே சூரியநாராயண சாஸ்திரி என்ற தனது பெயரை "பரிதிமாற்கலைஞர்" என்று தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவரும், திருப்பரங்குன்றத்தில் பிறந்து இந்தத் திருவிடம் முழுவதும் புகழ் செதுக்கியவருமான பெருமகனாரது நினைவைப் போற்றும் வகையில் அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

• திருப்பரங்குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி கிராமத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவில்லமாக ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

• அவரது நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரது வழித்தோன்றல்களுக்கு உரிய பரிவுத்தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**இந்து சமய அறநிலையங்கள்**

137. முன்னர் கழக ஆட்சியில் ஆன்றோர் சான்றோர் மனம் மகிழ அறநிலையப் பணிகள் நடந்தேறியதை அனைவரும் அறிவர். கோயில்களுக்குத் திருப்பணியாற்றி குடமுழுக்கு விழாக்களை நடத்துவதிலும், கோயில் சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதிலும், சொத்துப் பதிவேடுகளை உருவாக்குவதிலும், கோயில் சொத்துக்களை



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

மீட்பதிலும், கோயில்களின் வருவாயை உயர்த்துவதிலும், தமிழில் ஆகம நூல்களை வெளியிடுவதிலும் இந்த அரசு தொடர்ந்து ஆர்வம் காட்டி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை அவ்வப்போது பெற்று நடைமுறைப்படுத்திட திருக்கோயில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும்.

**சமூகச் சீர்திருத்தம்**

138. சமுதாயத்தை சீர்திருத்தப் பாதையில் இட்டுச் செல்வதற்கான திட்டங்களை வகுப்பதற்காக கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, முந்தைய ஆட்சியின்போது கலைக்கப்பட்ட சமூகச் சீர்திருத்தத் துறை மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க, சமூகவியல் ஆர்வலர்களைக் கொண்ட நிரந்தரக் குழு ஒன்று உருவாக்கப்படும்.

139. தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் இருந்த முள்ளை அகற்றிடும் வகையில் – உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோவில்களில் அர்ச்சகர் ஆகலாமென்ற சமத்துவக் கொள்கைக்கு இந்த அரசு செயல்வடிவம் கொடுத்திட முடிவு செய்து, அதற்கான அரசாணை பிறப்பித்து, அந்த அரசாணையை பிரத்தியேகமான அரசிதழிலும் அறிவிக்கை செய்துள்ளது. இந்த ஆணையைச் செயற்படுத்திட பல்வேறு அம்சங்களைப் பற்றிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட, ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. இராசன் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–30*

**சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனங்கள்**

140. ஜப்பான் நாட்டு பன்னாட்டுக் கூட்டுறவு நிதி வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தடுப்பணைகள், நிலத்தடி நீர், கசிவுநீர் குட்டைகள் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் மலைவாழ் மக்கள் வாழும் 40 கிராமங்கள் உட்பட வனப்பகுதிகளை ஒட்டியுள்ள 205 கிராமங்களில் 45,250 ஹெக்டேர் பரப்பளவுள்ள தரம் குன்றிய காடுகள் ரூ.101.42 கோடி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

## சுற்றுலா

141. தமிழகத்திற்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே சுற்றுலாத் தலங்களில் பன்னாட்டுத் தரத்திற்கு ஏற்ப அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதற்காக ஒரு சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கப்படும். ஏலகிரி, ஏற்காடு, பழவேற்காடு, தரங்கம்பாடி, பிச்சாவரம், செட்டிநாடு, சுருளி போன்ற அதிக பிரபலமடையாத, ஆனால் அதே நேரத்தில் முக்கியச் சுற்றுலா மையங்களாக விளங்கும் பகுதிகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

142. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிர்வாகத்தால் கம்பி வட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## சிப்பாய்ப் புரட்சி

143. 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு வேலூர் சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூணை நிறுவியது. 10–7–2006 அன்று நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சியின் இருநூறாவது ஆண்டு நிறைவு அரசு விழாவில் கலந்து கொண்ட முதலமைச்சர் அறிவித்திருப்பதையொட்டி, இளைஞர்களுக்கு வீரத்தை ஊட்டவும், விடுதலை உணர்வை எழுப்பவும், வேலூர் சிப்பாய்ப் புரட்சி பற்றிய விவரங்கள் பாடப் புத்தகங்களில் இடம் பெறவும், வேலூரில் மேலும் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்திடவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

## பகத் சிங் நூற்றாண்டு விழா

144. நாட்டு விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிமிகு வரலாற்றில் புரட்சிக் கனலாகப் புத்தொளிவீசும் பகத்சிங்கின் நூற்றாண்டுவிழா வரும் செப்டம்பர் திங்களில் தொடங்குவதை முன்னிட்டு இந்த ஆண்டு முழுவதும் செப்டம்பர் முதல் மாதந்தோறும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இந்த தியாகசீலனின் நினைவு போற்றும் நிகழ்ச்சிகள் அரசின் சார்பில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

145. தமிழகம் விளையாட்டுத் துறையில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்க ஆவன செய்யப்படும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடி ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்த இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் தேசிய விளையாட்டு மையம் ஒன்றை (National Institute of Sports) அமைக்க மைய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

146. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்திடும் வகையில், செயற்கை இழை ஓடுகளப்பாதை ரூ.2.5 கோடி செலவில் புதுப்பித்து அமைக்கப்படும்.

## திரைப்படத் துறை

147. தமிழ்த் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கும் அவ்வப்போது அந்தத் துறைக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டதை அத்துறையினரும் மாண்புமிகு உறுப்பினர்களும் நன்கறிவார்கள்.

முற்பகல் 11–35

148. தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளவாறு, திரைப்பட வெளிப்புறக் காட்சிகளுக்கான படப்பிடிப்புக் கட்டணம் தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இராஜாஜி மண்டபத்தில் படம் எடுக்க நாளொன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் என்றிருந்த கட்டணம் 10 ஆயிரம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்புக்கான வகை ஒன்று என்ற பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்டணம் என்றிருந்ததை 5 ஆயிரம் ரூபாய் என்றும், வகை இரண்டு என்ற பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் . கட்டணம் என்றிருந்ததை 3 ஆயிரம் ரூபாய் என்றும் குறைக்கப்பட்டுள்ளது. அதைப்போல, சின்னத் திரைப்படங்களுக்கான படப்பிடிப்புக் கட்டணங்களை பெரிய திரைப்படங்களுக்கானக் கட்டணத்தில் 50 சதவிகிதம் என்று குறைக்கப்பட்டுள்ளது. மேலும் கேளிக்கை வரியைப் பொறுத்தவரை

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஜூலை 22

• 1989–இல் புதிய படங்கள் மீதான வரி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 51 விழுக்காட்டில் இருந்து 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக கேளிக்கை வரி குறைக்கப்பட்டு, தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் புதிய திரைப்படங்களுக்கு 15 சதவிகிதமாகவும், பழைய படங்களுக்கு 10 சதவிகிதமாகவும் கேளிக்கை வரி இருந்து வருகிறது.

• திரைப்படத்துறைக்கும் தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய படங்களுக்கு தமிழிலேயே பெயர்கள் சூட்டப்படுமானால், அந்தப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

149. தரமணியில் உள்ள "தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்" விரிவாக்கப்பட்டு, இந்நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் முழு அளவில் இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் "எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்" (M.G.R. Film and Television Institute) என்று பெயர் சூட்டப்படும்.

150. அம்பேத்கர் ஆங்கில மொழிப்படம் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டால் ரூபாய் பத்து இலட்சம் அளிக்கப்படும் என்று இந்த அரசு 1997–98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, அவ்வாறே தற்போது வழங்கவிருப்பதையொட்டி; இப்போது 'இனமுரசு' சத்தியராஜ் நடிக்கும் 'தந்தை பெரியார்' என்ற திரைப்படத்துக்கு பெரியார் வாழ்ந்திருந்த வயதைக் குறிக்கும் வண்ணம் 95 இலட்சம் ரூபாயை இந்த அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்

151. அரசுத் துறைகள் அனைத்திலும் நிரப்பப்படாமல் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை ஒரு காலக்கெடுவுக்குள் நிறைவேற்றிடும் வகையில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. வேலை நியமனத்தடை ஆணையினால் பாதிப்புக்குள்ளானோரின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசுப்பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்க ஏதுவான ஆணைகளை இந்த அரசு வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜூலை 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

152. இந்த அரசு 13–5–2006 அன்று பதவியேற்ற பிறகு காலியாகவுள்ள அரசு பணியிடங்களை நிரப்புவதில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. 12,618 மக்கள்நலப் பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையில் 1393 மருத்துவர்களும் 1800 செவிலியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 1539 மருத்துவர்களும் 5260 செவிலியர்களும் காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்படுவார்கள். பள்ளிக்கல்வித் துறையில் 3191 ஆசிரியர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 7635 ஆசிரியர்கள்: ஆசிரியர் தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக நியமனம் செய்யப்பட உள்ளனர். இதுவரை ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தின்கீழ் பணிபுரிந்துவந்த 45,987 ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 400 கோடி கூடுதல் செலவாகும். பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 236 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அரசு கலைக்கல்லூரிகளில் 1020 விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளனர். பொதுப் பணித் துறையில் 569 உதவிப் பொறியாளர்கள் மற்றும் காவல் துறையில் 755 சார் ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

153. அரசுப் பணியாளர்கள் பணியிலிருக்கும்போது மரணமடைந்துவிட்டால் அவர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளையொட்டி கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை அரசுத் துறைகளில் செய்வதற்கான ஆணைகள் இடப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் சாலைப்பணியாளர்கள் ஆகியோரின் வேலை நிறுத்தப் போராட்டத்தின்போதும், பணி நீக்க காலத்தின்போதும் உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் அளிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

154. சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், உலகவங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களில் ப்ளஸ் 2 தகுதியுடன் இடைநிலை

ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நியமனம் இந்த ஒரே ஒரு முறை மட்டும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–40*

155. *2000–2001* ஆம் ஆண்டுவரை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களில், தொகுப்பு C மற்றும் D அலுவலர்களுக்கு மிகை ஊதியம் (Bonus), தொகுப்பு A மற்றும் B அலுவலர்கள், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்கள் ஆகியோருக்கு சிறப்பு மிகை ஊதியம் (Special Adhoc Bonus) மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பொங்கல் பரிசு (Pongal Gift) ஆகியன வழங்கப்பட்டு வந்தன. *2001–2002*ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ள இச்சலுகையினை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், இந்நிதியாண்டில் வரும் பொங்கல் பண்டிகையின்போது மேற்கூறிய மிகை ஊதியம், சிறப்பு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு ஆகியன மீண்டும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக இந்தத் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.*250* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

156. கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் மீதான அலுவலர் குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டு, ஊதிய நிலுவைத் தொகையில் *40* சதவிகிதத் தொகையை இரு ஆண்டுத் தவணைகளில் வழங்கி, எஞ்சியுள்ள *60* சதவிகித நிலுவைத் தொகை *2003–2004*ஆம் ஆண்டு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. பின்னர் *2004–2005*ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் மூன்று சம ஆண்டுத் தவணைகளில் இந்நிலுவைத் தொகை அஞ்சலக சேமிப்புப் பத்திரங்களாக வழங்கப்பட்டு வருகிறது. பணியில் இருப்பவர்களுக்கு இதுவரையிலும் இந்த நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இது தொடர்பான அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, *1–8–2006* அன்று பணியில் இருப்பவர்களுக்கும் இனி ஓய்வு பெறுபவர்களுக்கும் இந்த நிலுவைத் தொகை இந்த நிதி ஆண்டிலிருந்து மூன்று சம ஆண்டுத் தவணைகளில் ரொக்கமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் தவணைத் தொகை வரும் ஆகஸ்ட் திங்களில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும்.





ஏற்கெனவே ஓய்வு பெற்றவர்களுக்கு மீதமுள்ள தவணைத் தொகைகளும் ரொக்கமாகவே வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.*871.58* கோடி செலவாகும். இந்த ஆண்டில் ரூ *290.53* கோடி செலவு ஏற்படும்.

157. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி *23–10–2002* முதல் *1–11–2002* வரையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பத்து நாட்களை ஊதியமற்ற விடுப்பாகக் கருத வேண்டுமென முன்னர் ஆணையிடப்பட்டது. அந்த வேலை நிறுத்த காலம் ஊதியத்தோடு கூடிய பணிக்காலமாகக் கருதப்படும் என்று தற்போது ஆணையிடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

158. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, அவர்களது ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு, *1–4–2003*–க்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட நடைமுறையே மீண்டும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, இந்த அரசு *31–7–2006* முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கான பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது.

- *33* ஆண்டுகள் பணி புரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, *30* ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

- ஓய்வு பெறுவதற்கு முந்தைய *10* மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் *50* சதவிகிதமே ஓய்வூதியமாக கணக்கிடப்பட வேண்டும் என்பதை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் *50* சதவிகிதம் அல்லது கடைசி *10* மாதங்களின் சராசரி ஊதியத்தில் *50* சதவிகிதம் ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

159. ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை தென்னகத்தில் முதன் முதலாக ஏற்றுச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடு என்பதால் இப்போதும் ஆறாவது ஊதியக் குழுவினை அமைக்க மத்திய அரசு செய்துள்ள முடிவினை நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது மத்திய அரசு வெளியிடும் ஆணையை செயற்படுத்துவது குறித்து இந்த அரசு உரிய நேரத்தில் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

## நிர்வாகச் சீர்திருத்தக் குழு

160. ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகத்தை அளிப்பதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளதை மெய்ப்பிக்கும் வகையில் அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்து, அன்றாட வாழ்வில் பொதுமக்கள் அணுகும் அலுவலகங்களில் நிலவும் காலதாமதத்திற்கும் ஊழலுக்கும் அடிப்படைக் காரணமான சிகப்பு நாடா முறையினை (Red Tapism) அகற்றிடத் தேவையான பரிந்துரைகளை வழங்கிட பல்துறை வல்லுநர்களைக் கொண்ட நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்படும்.

*முற்பகல் 11–45*

## ஆண்டுத் திட்டம்

161. 2006–2007 ஆம் ஆண்டு பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி ஆண்டாகும். புதுடில்லியில் 6–6–2006 அன்று மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோருக்கிடையே நடந்த கூட்டத்தில், 2006–2007 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.12,500 கோடி என்ற உயர் அளவிலான திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு, 2005–2006 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டை விட 37 சதவீதம் அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

162. 2005–2006 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.10.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதை உயர்த்தி, 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.17.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு இந்த நிதியாண்டில் ரூ.35.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

163. மாநிலத்தின் முன்னேறிய மற்றும் பின்தங்கியுள்ள மாவட்டங்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக, இப்பகுதிகளின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய சமவளர்ச்சித் திட்டம் (ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா – RSVY) திருவண்ணாமலை, திண்டுக்கல், சிவகங்கை கடலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டொன்றுக்கு





ரூ.15 கோடி வீதம் மூன்றாண்டுகளுக்கு மொத்தம் ரூ.45 கோடி அளிக்கப்பட்டு திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

## வரிகள்

164. 2006–2007 ஆம் ஆண்டிற்கு புதிய வரி விதிப்பு இல்லாத வரவு–செலவு அறிக்கையினை தாக்கல் செய்வதில் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

165. இம்மாநிலத்தின் உற்பத்தியாளர்களும் வணிக சமூகத்தினரும் மதிப்புக்கூட்டு வரியை அறிமுகப்படுத்துதல் குறித்து அரசு விரைந்து முடிவெடுக்குமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். கடந்த 5–7–2006 அன்று நடைபெற்ற, நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்பான உற்பத்தியாளர் மற்றும் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில், அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததற்கு இணங்க, முழுமையாக ஆய்வு செய்து, மதிப்புக் கூட்டு வரித் திட்டம் வரும் ஜனவரி 1, 2007 முதல் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு வணிக அமைப்புகள் விடுத்துள்ள வரிவிகிதக் குறைப்பு கோரிக்கைகள், குறிப்பாக, இம்மாநிலத்தில் மருந்து உற்பத்தி தொழில் மற்றும் பல்வேறு பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் கோரிக்கைகள் மதிப்புக் கூட்டுவரித் திட்டத்தில் பெருமளவில் நிறைவேற்றப்பட்டுவிடும்.

166. மதிப்புக் கூட்டுவரி அறிமுகத்தால் சிறு வணிகர்கள் எந்தவித இடர்ப்பாட்டுக்கும் உள்ளாகாமல் இருக்க ஏற்ற வழிவகை செய்யப்படும். இந்த நோக்கத்தின் அடிப்படையில், ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இம்மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டுவரியின் கீழ் பதிவு பெறுவதிலிருந்தும் வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், சுமார் 45,000 வணிகர்கள் பயன் பெறுவார்கள்.

167. வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்களுக்கு எந்தவித வரியும் விதிக்கக்கூடாது என்பது திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஏற்றமிகு கொள்கையாக எப்போதுமே இருந்து வருகிறது. இந்தக் கொள்கையின் செயல்வடிவமாக, 1996 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் மாநிலத்திற்குள் விற்பனையாகும் பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி நீக்கப்பட்டது. அதன்

பின்னர், இந்த உணவுப் பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்பட்டது. தற்போது பருப்பு. பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி, 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறே முழுமையாக விலக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.110 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.

168. நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளிச்சந்தையில் திறம்பட போட்டியிட உதவும் வகையிலும், மதிப்புக் கூட்டுவரியை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு முன்னோடியாகவும், மாநிலத்தின் உற்பத்திப் பொருட்களுக்காகத் தேவைப்படும் மூலப்பொருட்கள் மீதான நுழைவு வரியினை உற்பத்திப் பொருட்கள்மீது விதிக்கப்படும் வரிகளிலிருந்து முழுமையாக கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படும். இதனால் மாநிலத்தின் உற்பத்தியாளர்களின் இடர்ப்பாடுகள் களையப்படும். இதற்கான அரசு அறிவிக்கை விரைவில் வெளியிடப்படும். உயர் அடர்த்தி பாலிஎத்திலின் (HDPE) பொருட்கள் மீதான நுழைவு வரியினை விற்பனை வரியில் ஈடுசெய்வதற்கு தற்போது வழங்கப்படும் சலுகை, குறைந்த அடர்த்தி பாலிஎத்திலின் (LDPE) பொருட்களுக்கும், பாலிபுரோப்பலின் (PP) மணிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது ஒரு தொடர் கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்தக் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர்ந்து இந்தச் சலுகை, குறைந்த அடர்த்தி பாலிஎத்திலின் (LDPE) பொருட்களுக்கும் பாலிபுரொப்பலின் (PP) மணிகளுக்கும் நுழைவு வரி விதிக்கப்பட்ட நாளான 21–3–2003 முதலாகவே வழங்கப்படும்.

**முற்பகல் 11–50**

169. நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ சொ்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலைமீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





170. சிட்டா நூல், கைத்தறித் துணிகள் தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாகும். கைத்தறித் தொழிலை ஊக்குவிக்கவும், அதில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் சிட்டா நூலுக்கு முழு வரிவிலக்களிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.56 கோடி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும்.

171. நமது மாநிலத்தில் பின்னலாடை (Hosiery) தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் இந்த அரசு எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ளது. இந்தத் தொழில், நாட்டிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் வேலைவாய்ப்பினை அளித்துவருகிறது. இந்தத் தொழிலுக்கு ஊக்கமளிக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த அரசு வெளி மாநிலங்களுக்கு விற்கப்படும் பின்னலாடைகளின் மீதான விற்பனை வரியினை, கடந்த 1996ஆம் ஆண்டு 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைத்தது. ஆனால், பின்னர் மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தம் காரணமாக, வெளிமாநிலத்தில் பதிவு செய்யப்படாத வணிகர்களுக்கு விற்கப்பட்ட பின்னலாடைகளுக்கு 10 சதவிகிதம் மத்திய விற்பனை வரி செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட ஊக்குவிப்புத் திட்டச் சலுகை 2002 முதல் 2005 வரையிலான காலத்திற்குத் தரப்படாததால் நமது மாநிலத்திலுள்ள பின்னலாடைத் தயாரிப்பாளர்கள் மிகுந்த இன்னலுக்கு ஆட்பட்டுள்ளனர். விதிக்கப்படும் வரியில் 90 சதவீதத்தை வணிகர்களுக்கே திருப்பித்தரும் ஊக்குவிப்புத் திட்டம் 13–5–2002 முதல் 3–4–2005 வரையான காலத்திற்கும் வரியைக் கைவிடுதல் மூலமாக நீட்டிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

172. கழிவுத்தாள் வணிகர்கள் அந்தத்தாளை கொள்முதல் செய்யும்போது தற்போது 4 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. அந்த வணிகர்கள் அதே கழிவுத்தாளை வெளிமாநிலத்திற்கு விற்கும்போது மீண்டும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் 4 சதவிகித வரி செலுத்த வேண்டியுள்ளது. இதனால் கழிவுத்தாள் விற்பனை செய்யும் வணிகர்கள் தங்கள் பொருட்களை வெளிமாநிலச் சந்தைகளில் போட்டியிட்டு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச்சட்டத்தின்கீழ் கழிவுத்தாளுக்கு வரி விதிக்கப்[illegible] அந்த

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227378
சென்னை-600 008
நூலகம்

பொருட்கள் வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும்போது, அந்த வெளிமாநில விற்பனைக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

173. செங்கல் உற்பத்தியில் எரிசாம்பல் ஒரு முக்கிய மூலப் பொருளாகும். சுற்றுச் சூழலைப் பேணும்வகையில் செங்கல் உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்யும் எரி சாம்பலுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.

174. மென்பொருட்கள் தமிழ் மொழியில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் உரிமம் அளிக்கப்பட்ட மென்பொருட்களுக்கு (Licensed Software) விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

175. சாம்பிராணிக்கு 1996–ல் அளிக்கப்பட்ட வரிவிலக்கு, 2002–ல் நீக்கப்பட்டு 4 சதவிகித விற்பனை வரி விதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே சாம்பிராணி உற்பத்தி செய்கின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு, சாம்பிராணிக்கு மீண்டும் விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

176. வரிபாக்கியினை செலுத்த இயலாத வணிகர்களின் இடர் களையும் வண்ணம் ஒரு புதிய சமாதானத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பது வணிகர் சமூகத்தின் முக்கியக் கோரிக்கையாகும். 1–1–2007 முதல் புதிய வரிமுறையான மதிப்புக்கூட்டு வரியினை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதால் தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச்சட்டத்தின்கீழ் இருக்கும் வரி நிலுவைகள் அனைத்தையும் ஒரு முடிவிற்கு கொண்டுவருவது, வணிகர் மற்றும் அரசு ஆகியோரின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இதனைக் கருத்தில்கொண்டு வரிபாக்கியினை செலுத்த இயலாத நிலையிலிருக்கும் அனைத்து வணிகர்களுக்கும் பயனளிக்கும் வகையில், வணிகர் நட்புறவான ஒரு சமாதானத் திட்டத்தினைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்புக் கூட்டத்தொடரிலேயே இத்திட்டத்திற்கான விளக்கங்களைக் கொண்ட சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

177. முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட மறுவிற்பனை வரி (Resale Tax) நீக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தோம். அந்த



வாக்குறுதியினை நிறைவேற்றும் வண்ணம், மறுவிற்பனை வரி 1–1–2007 முதல் நீக்கப்படுகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## பதிவுத் துறை

178. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சார் பதிவாளர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 150 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு, பொது மக்களுக்கு விரைவான சேவை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் எஞ்சியுள்ள 108 சார் பதிவகங்களும் இவ்வாண்டு கணினிமயமாக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.11.11 கோடி இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

179. போலி முத்திரைத்தாள்களை புழக்கத்திலிருந்து அறவே நீக்கும் வகையில் முத்திரைத் தீர்வை செலுத்தியதை இயந்திரங்கள் மூலம் ஆவணங்களில் அச்சாட்சி செய்தல் (Franking) அல்லது மின்னணு முறையில் முத்திரைத்தீர்வை வசூலித்தல் (e-stamping) போன்ற மாற்று ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

180. விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் தங்கள் தொழில் சம்பந்தப்பட்ட தேவைகளுக்காக நகைகள் மற்றும் அசையாச் சொத்துக்களை வங்கிகளில் அடமானம் வைத்துக் கடன் பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் கடனுக்காக அளிக்கப்படும் அடமான ஆவணங்களுக்கு, விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் கடன் தொகையில் 0.5 சதவீதம் முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியுள்ளது. விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அச்சாட்சி செய்யப்படாத அடகு அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

## ஒட்டுமொத்த நிதிநிலை

181. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய கணிப்புகளை தற்போது நான் அளிக்கின்றேன். 2006–2007 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவுகள் ரூபாய் 38 ஆயிரத்து 731 கோடியாக

இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவு 39 ஆயிரத்து 860 கோடி ரூபாய் என மதிப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் வருவாய் பற்றாக்குறை ரூபாய் 1,129 கோடியாகவும், மொத்த வருவாய் வரவுகளில் 2.9 சதவீதமாகவும் இருக்கும். நடப்பு நிதியாண்டின் கடன்களும் முன்பணங்களும் (நிகரம்) உள்ளிட்ட மூலதனச் செலவு ரூபாய் 6,102 கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 7,231 கோடி அளவிற்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும். 2006–2007ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிதிப்பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவிகிதத்திற்குள்ளாகவே இருக்கும். இது 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை ஒத்தே இருக்கும். இந்த நிதிப்பற்றாக்குறை ரூபாய் 7,453 கோடி அளவிற்கு நிகரக் கடன் மூலம் எதிர்கொள்ளப்படும். பொது கணக்கு (நிகரம்) மற்றும் எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்) ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் 2006–2007 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை ரூபாய் 4 கோடியாக இருக்கும். இந்தப் பற்றாக்குறை புதிய வரிகள் ஏதும் விதிக்காமலேயே செலவினங்களின் சிக்கனத்தைக் கடைப்பிடித்தும் மேம்பட்ட வரிநிர்வாகம் மூலமாகவும் ஈடுகட்டப்படும்.

நண்பகல் 12–00

182. 31–3–2001 அன்று ரூபாய் 28 ஆயிரத்து 685 கோடி அளவில் அரசின் கடன் பொறுப்புகள் இருந்தன. இக்கடன்களுக்காக மாதந்தோறும் ரூபாய் 293 கோடி வட்டியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளின்படி, 31–3–2006 அன்று உள்ளபடி, ரூபாய் 56 ஆயிரத்து 94 கோடி அளவிற்கு, மிக அதிகமான கடன் பொறுப்புகள் இவ்வரசிற்கு விட்டுச் செல்லப்பட்டுள்ளது. இந்தப் பெருமளவு கடனிற்கு செலுத்த வேண்டிய வட்டிப் பொறுப்புகளுக்கு மட்டும், ஒவ்வொரு மாதமும் ரூபாய் 446 கோடி அளவிற்கு நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. எனினும், தமிழ்நாட்டு மக்களின் நலனை தலையானதாகக் கருதி, வளர்ச்சி நோக்குடைய இந்த வரவு–செலவு திட்டத்தை செயலாக்க இவ்வரசு முனைந்துள்ளது. அதே நேரத்தில் நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீத அளவிற்குக் கட்டுப்படுத்த எந்தவொரு வரிவிகிதத்தையும் உயர்த்தாமல் பிற நிதி ஆதாரங்கள் அனைத்தையும் திரட்டியுள்ளது. இவ்வாறாக நிதிச் சமன்பாட்டில் சரிவு ஏற்படாவண்ணம் சமூகப் பாதுகாப்பு அரணை வலுப்படுத்தியுள்ளோம்.

183. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில்@ அளிக்கப்பட்டுள்ள நடுத்தரகால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான

@ பக்கம் 57 முதல் 65 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





மாநிலத்தின் நிதிநிலைச் செயல்திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். நடுத்தரகால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இவ்வரசு செம்மையாகப் பின்பற்றும்.

184. அய்யன் திருவள்ளுவர் வகுத்தளித்தவாறு – தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியவை என்றைக்கும் நீங்காமல் நிறைந்திடப்பெற்று – அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய தகுதிகள் மிகுந்திடப்பெற்று – கொஞ்சமும் குறைவின்றி நமது நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழுக்கும்; வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பரிணாமக் கூறுகளுக்கெல்லாம் பாதையைப் பண்படுத்திக் கொடுத்து பூமிப்பந்தின் மனித இனங்களில் புகழ்பூத்த, மிகவும் மூத்த இனமாம் நற்றமிழர்க்கும்; தொண்டூழியம் தொடர்ந்து செய்து வருவதையே பிறவிப்பயனும் பெருமையும் என்பதாக் கொண்டு ஓய்வின்றி; நாளும் உழைத்து வரும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள்;

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

எனும் இலக்கணத்திற்குரிய இனிய இலக்கியமாக இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையினைத் தயாரிப்பதில் தமது கடமை உணர்வால் பட்டை தீட்டப்பெற்ற வைரமென ஒளிரும் நூலறிவுடன் சிறந்த மதி நுட்பத்தாலும், நீண்ட பல ஆண்டுகளாக நாட்டு மக்கள் மனமறிந்து நடத்திய நிருவாகத்தினால் பெற்ற பட்டறிவாலும், அய்யன் வள்ளுவன் வகுத்த வாழ்வியல் நெறியில் – செழித்திருக்கும் தமது சிந்தனைத் திறனையும், ‘வெல்லுஞ் சொல்இன்மை அறிந்து’ பிரயோகித்திடும் சொல்வன்மையினையும், ‘அற்றங் காக்குங் கருவி’யாம் அறிவாற்றலையும் செலவிட்டுச் செவ்விய வழி காட்டியிருக்கிறார்கள். எனது நெஞ்சம் நிறைந்த நன்றி எந்நாளும் உரித்தாகுமாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

185. திக்கெட்டும் வாழும் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் செறிவான வரவேற்பையும் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே பரவி விரவியிருக்கும் பல்வேறு அம்சங்களும் இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையிலே இடம் பெற்றுள்ளன.

186. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் – கழனி காத்திடும் விவசாயிகள், கடி துழைத்திடும் பாட்டாளிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள்,

வணிகர்கள், பள்ளி, கல்லூரிகள் செல்லும் மாணவர்கள், கடல் மீதேறி வாழ்க்கைப் பயணம் செலுத்தும் மீனவர், நெசவாளர்கள், பனை தென்னையைச் சார்ந்திருப்போர் மற்றும் கைவினைஞர்கள் - மகிழ்ந்து வாழ்த்தி வரவேற்கத் தக்க வகையிலே; எண்ணியெண்ணிச் செயல் திட்டங்களைச் சேர்த்துச் சேர்த்து, திரட்டிப் படைக்கப்பட்டிருப்பதே இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

187. "ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு. அதுபோல அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு. எனவே, இம்மன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், அறத்தை அணி செய்யும் ஆலோசனைகளையும் இந்த அரசு வரவேற்று, அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்" என்று 25–3–1971 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றிய போது கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதை, பேரவைக்கு நினைவூட்டிடப் பெரிதும் விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உறுதியில் இன்றைக்கும் எந்தவித மாற்றமும் இல்லை. எனவே அன்று அவர் வழங்கிய உறுதிமொழியை — இன்று அவரது சார்பில் நான் வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

188. இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் முழு ஈடுபாடு கொண்டு இடையறாது ஒத்துழைத்து அரும்பணியாற்றிய நிதித்துறைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2006–2007-ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 24-07-2006, திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## இணைப்பு

(54 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## நடுத்தரக்கால நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு 2003-ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் பன்னிரண்டாவது நிதிக்குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப பின்னர் திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு வரவு செலவுத் திட்ட அறிக்கையுடன் நடுத்தரக்கால நிதித் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை சட்ட பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, மேற்கோள்களை விளக்கி தொடர் ஆண்டுகளுக்கு ஏற்ற இலக்குகளாக, வருவாய் பற்றாக்குறை, நிதிநிலை பற்றாக்குறை ஆகியவை குறித்து வரையறுக்கப்பட்ட நிதிநிலைக் குறியீடுகளை கோடிட்டுக் காட்டி இந்த நடுத்தரக்கால நிதித் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி நடப்பு நிதிநிலைப் போக்குகளையும் அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2006–2009 ஆம் ஆண்டுகளின் காலகட்டத்திற்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய நடுத்தரகால நிதித் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவை முன் வைக்கப்படுகிறது. இத்துடன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 2006-2009 ஆண்டுக் காலத்திற்கான நடுத்தரக்கால நிதித் திட்டத்தைக் காட்டுகிறது.

### நோக்கங்கள்

2. 2002--2007-ஆம் ஆண்டுக்கான பத்தாவது திட்டம், 8 சதவீத ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது. வேளாண்மைத் துறை நிலையான விலைகளின் அடிப்படையில் (Constant prices) 4 சதவீத அளவில் வளரும் என்று பத்தாவது திட்டத்தை வடிவமைக்கும்போது எதிர்பார்க்கப்பட்டது. இதன் பின்னர், மூன்றாண்டுகளாக தொடர்ந்து வந்த வறட்சி, சுனாமி மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை இத்துறையின் வளர்ச்சியை முடக்கிவிட்டது. மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் வேளாண்மை மற்றும் அது தொடர்பான தொழில்களையே சார்ந்திருப்பதால், அவர்களுடைய வருமானமும் இதனால் குறைந்துவிட்டது.

3. இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது வேளாண்மைத் துறைக்கு உயிரூட்டி, விவசாயிகளுக்கு போதுமான

வருவாய் ஆதாரங்களை உறுதி செய்யவேண்டிய பெரும் பொறுப்பை இந்த அரசு எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. விவசாயிகள் வேளாண் நடவடிக்கைகளை மீண்டும் துவங்கச் செய்வது மட்டுமின்றி, பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் இந்நடவடிக்கை மிக அவசியமானதாகும். பொருளாதாரத்தின் பிற துறைகளும் வேளாண்மைத் துறையோடு இணைந்திருப்பதால், தமிழ்நாட்டின் 60 சதவித மக்கள்தொகை வேளாண்மை மற்றும் அது தொடர்பான தொழில் நடவடிக்கைகளையே சார்ந்துள்ளது. எனவே விவசாயிகளின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரிக்கப்படவில்லையெனில், தமிழ்நாட்டு மக்களின் வருமான நிலைகளில் சீரான வளர்ச்சியை அடைவது மிகக் கடினம் என்பது புலனாகும். திருப்பிச் செலுத்த இயலாத அளவிலான பெரும் கடன்பளுவிலிருந்து விடுபட்டு, வேளாண் நடவடிக்கைகளை மீண்டும் துவங்குவதற்கு, விவசாயிகளுக்கு உரிய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டி, கூட்டுறவுத் துறையில் விவசாயிகள் பெற்ற பயிர் கடன்களை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டது. இதனால் ரூபாய் 7000 கோடி அளவிற்கு மாநில அரசுக்கு பெரும் நிதிப்பொறுப்பு ஏற்படும். விவசாயத் துறைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள பிணைப்பையும் விவசாயிகளின் ஒட்டுமொத்த நலனையும் நன்கு கருதியே இந்த பெரும் பொறுப்பை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி 2006–2009ஆம் ஆண்டுகளுக்கான மத்திய நடுத்தரக்கால நிதி திட்டத்தை திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

4. 2007–2008ஆம் ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 5 சதவீத அளவிற்கு வருவாய் பற்றாக்குறை குறைக்கப்படவேண்டும் எனவும் 2008–2009ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை முற்றிலுமாக நீக்கப்பட்டு அதன் பின்னர் இந்த நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும் எனவும் இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் பற்றாக்குறை 5 சதவீத அளவிற்கும் குறைவாக கட்டுப்படுத்தப்பட்டு நிதி நிலைமை பொறுப்புடைமை சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளை மாநிலம் எய்துவது உறுதி செய்யப்படும் என்பதை 2006–2007ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்டம் காட்டுகிறது. மேலும், நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் 2007–2008 ஆம் ஆண்டில் வருவாய் வரவுகளில் வருவாய் பற்றாக்குறை 1.4 சதவீதமாக இருக்கும் எனவும், 2008–2009ஆம் ஆண்டில் தமிழ்நாடு வருவாய் உபரி மாநிலமாக ஆகிவிடும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. கடன் பொறுப்புகளை விவேகத்துடன் நிருவகிப்பதன் மூலமும், மேம்பட்ட வரி நிர்வாகத்தின் மூலமும் இவை எய்தப்படும்.



5. 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப்பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடுகளில் 3 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. நடுத்தரக்கால நிதித் திட்டத்தில், இப்பற்றாக்குறை 2007–2008ஆம் ஆண்டில் 2.68 சதவீதமாகவும் 2008–2009 ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகவும் குறைக்க இயலும் எனக் கருதப்பட்டுள்ளது. இந்த நிதிப்பற்றாக்குறை விகித மாற்றங்களினால் மாநிலத்தில் அத்தியாவசிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு தேவையான ஒட்டுமொத்த முதலீட்டுச் செலவுகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாது.

6. 2008–2009 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை முற்றிலுமாக நீக்கப்படுவதால், நிதிப் பற்றாக்குறை முழுவதும் மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுவதாக அமையும் என்பதையும் மாநிலம் தனது நடப்புச் செலவுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட இயலும் என்பதையும் இது குறிக்கும்.

7. மாநிலம் தனது எதிர்பாராக் கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31–3–2005 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் 27.34 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.12 சதவீதமாககவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியகூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 7.5 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31–3–2005 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 7.99 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.20 சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

8. சமூகத் துறைகளில், மூலதனங்களை பெருமளவு அதிகரிக்கும் அதே நேரத்தில் மூலதனத்திற்கான ஒதுக்கீடுகளையும் அதிகப்படுத்துவதோடு பன்னிரண்டாம் நிதிக்குழு நிர்ணயித்துள்ள குறியீடுகளுக்கேற்ப சொத்துக்களின் பராமரிப்புச் செலவுகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் மேற்கொள்ளவிருக்கும் நிதித் திருத்தங்கள் வெறும் நிதி இலக்குகளாக இருப்பது மட்டுமின்றி, பல்வேறு துறைகளுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட பின்னும் நிதி இலக்கை எய்தப் பெறுவதை உறுதி செய்யும்.

## எதிர்கால கணிப்புகள்

## வருவாய்க் கணக்கு வரவுகள்

### மத்திய வரிகளில் பங்கு

9. மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு 2006–2007 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 6026 கோடி அளவிலேயே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2007–2008 ஆம் ஆண்டிற்கு 13 சதவித வளர்ச்சியை கணக்கில் கொண்டும் 2008–2009 ஆம் ஆண்டிற்கு 12.5 சதவீத வளர்ச்சியை கணக்கில் கொண்டும் மத்திய அரசு வரிகளின் பங்கீடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### மாநில அரசின் சொந்த வரி வருவாய்

10. தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பீடுகளில் வரிவருவாயின் விகிதம் நாட்டிலேயே மிக உயர்ந்ததாகத் திகழ்ந்து வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த விகிதம் 11.2 சதவீதமாக மேலும் அதிகரித்துள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாய் ரூபாய் 27,011 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைக் காட்டிலும் 21.87 சதவீதம் அதிகமாகும். பின்வரும் ஆண்டுகளில் மாநில சொந்த வரிவருவாயின் வளர்ச்சி வீதம் 12 சதவீதமாக கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

11. 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தில் வணிக வரிகளின் வசூல் ரூபாய் 19,319 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005–2006 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளைவிட 21.46 சதவீதம் கூடுதலாகும். பின்வரும் ஆண்டுகளுக்கான கணிப்புகள், நடப்பு ஆண்டில் வரிக்கட்டமைப்பில் மத்திய விற்பனை வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய மாற்றங்களின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளன. மத்திய விற்பனை வரி அக்டோபர் 2006 முதல் 3 சதவீதமாகவும், 2007–2008 ஆம் ஆண்டில் 2 சதவீதமாகவும், 2008–2009 ஆம் ஆண்டில் 1 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்படுவதால் ஏற்படும் இழப்பு நடப்பாண்டில் 100 சதவீதம் மத்திய அரசால் ஈடு செய்யப்படும் என்றும் 2007–2008 ஆம் ஆண்டில் 75 சதவீதமும் 2008–2009 ஆம் ஆண்டில் 50 சதவீதமும் ஈடு செய்யப்படும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.





12. 2006–2007 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 3673 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 21.95 சதவீதம் கூடுதலாகும். பின்வரும் ஆண்டுகளுக்கு 8 சதவீத வளர்ச்சி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

13. வீட்டுவசதி மற்றும் அசையாச் சொத்துக்களை வாங்கி விற்பதில் காணப்படும் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் வகையில், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களில் மிக உயரளவு வளர்ச்சி காணப்படுகிறது. நடப்பாண்டில் மதிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 2152 கோடி அளவிலான வரவுகள், 2005–2006 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளிலிருந்து 36.15 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. வருமாண்டுகளில் முத்திரைத் தாள்கள் மீதான தீர்வையை படிப்படியாக குறைப்பதற்கு இந்த அரசு மேற்கொண்டுள்ள முடிவைக் கருத்தில் கொண்டு குறைந்த அளவாக 12 சதவீத வளர்ச்சி வீதத்தில் வருமாண்டுக்கான வரவுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

14. மோட்டார் வாகன வரிகள் நடப்பாண்டில் 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 10.15 சதவீதம் கூடுதலாக மதிப்பிடப்பட்டுள்ளன. பின்வரும் ஆண்டுகளுக்கு 8 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

### வரி அல்லாத வருவாய்

15. இவ்வினம் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 2671 கோடியாகும். 2005–2006 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 9.41 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் வரவுகளில் வரி அல்லாத வருவாயின் பங்கு 6.9 சதவீதமேயாகும். இந்த வரிகளை நிருவகிக்கும் நிறுவனங்கள் (Agencies) பயன்பாட்டுக் கட்டணங்களைத் தாமே

## அட்டவணை – நடுத்தர கால நிதித் திட்டம்

தற்போதைய விலையில் ரூபாய் கோடியில்

| ஜூலை 2006 | 2004-2005 கணிப்புகள் | 2004-2005 கணக்குகள் | 2005-2006 கணிப்புகள் | 2005-2006 திருத்த மதிப்பீடு | 2006-2007 கணிப்புகள் | 2006-2007 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2007/08 கணிப்புகள் | 2008/09 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருவாய் வரவு** | **24038.94** | **28159.34** | **26608.79** | **32653.29** | **31695.17** | **38475.00** | **42906.60** | **47689.68** |
| **மாநிலத்தின் சொந்த வருவாய்** | **18585.27** | **21273.20** | **20283.29** | **24357.23** | **24389.40** | **29428.53** | **32925.76** | **36699.14** |
| வரி | 17159.12 | 19357.04 | 18788.36 | 22163.94 | 22476.42 | 27010.70 | 30387.04 | 34033.49 |
| வரி அல்லாதவை | 1426.15 | 1916.16 | 1494.93 | 2193.29 | 1912.98 | 2417.82 | 2538.72 | 2665.65 |
| **மத்திய அரசிடமிருந்து மாற்றப்பட்டவை** | **5453.67** | **6886.14** | **6325.50** | **8296.06** | **7305.77** | **9046.47** | **9980.84** | **10990.54** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 3709.81 | 4236.39 | 4407.26 | 5041.21 | 5233.16 | 6025.53 | 6808.85 | 7659.96 |
| உதவி மானியம் | 1743.86 | 2649.75 | 1918.24 | 3254.85 | 2072.61 | 3020.94 | 3171.99 | 3330.59 |
| | | | | | | | | |
| **மொத்த வருவாய்ச் செலவு** | **27433.85** | **28862.68** | **29505.33** | **33013.30** | **33092.46** | **39604.23** | **43514.46** | **47668.44** |
| **வட்டியல்லாத செலவு** | **25532.17** | **28980.17** | **27252.21** | **33406.21** | **32200.88** | **40363.87** | **44146.78** | **47895.27** |
| சம்பளங்கள்(கல்விக்கான மத்திய அரசின் உதவி உட்பட) | 9145.03 | 8429.51 | 9611.40 | 9551.45 | 10356.72 | 12102.66 | 13762.93 | 15139.22 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 4520.21 | 3919.17 | 5213.42 | 4680.79 | 5313.20 | 5671.79 | 5947.56 | 6661.27 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 2741.54 | 3608.34 | 2912.58 | 4389.02 | 3746.30 | 4279.05 | 4621.37 | 4852.44 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 28.10 | 3.23 | 29.51 | 45.08 | 30.98 | 9.32 | 9.32 | 9.32 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 5727.75 | 8153.50 | 5940.76 | 9656.19 | 8674.14 | 12199.05 | 13173.95 | 14319.11 |
| மூலதன ஒதுக்கீடு | 2945.14 | 4563.96 | 3275.14 | 4846.38 | 4475.14 | 6431.64 | 6431.64 | 6688.90 |
| நிகரக் கடன் வழங்கல் | 424.40 | 302.46 | 269.40 | 237.29 | 204.40 | -329.64 | 200.00 | 225.00 |
| **நிதி அளவீடுகள்** | | | | | | | | |
| **முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–)** | **-1493.23** | **-820.83** | **-643.42** | **-752.91** | **-505.71** | **-1888.87** | **-1240.18** | **-205.58** |
| வட்டி வழங்கல் | 5271.22 | 4748.93 | 5797.66 | 4690.76 | 5571.12 | 5342.36 | 5999.33 | 6687.08 |
| மொத்த வருவாய் வரவுகளில் வழங்கப்பட்ட வட்டித் தொகை | 21.93% | 16.86% | 21.79% | 14.37% | 17.58% | 13.89% | 13.98% | 14.02% |
| **வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)** | **-3394.91** | **-703.34** | **-2896.54** | **-360.00** | **-1397.29** | **-1129.23** | **-607.87** | **21.24** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | -14.12% | -2.50% | -10.89% | -1.10% | -4.41% | -2.93% | -1.4% | 0.0% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | 50.19% | 12.63% | 44.97% | 6.61% | 22.99% | 15.62% | 8.40% | -0.31% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) | **-6764.45** | **-5569.76** | **-6441.08** | **-5443.68** | **-6076.83** | **-7231.23** | **-7239.51** | **-6892.66** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) (சரிக்கட்டப்பட்டவை) | -3.8% | -2.9% | -3.3% | -2.6% | -2.6% | -3.00% | -2.68% | -2.30% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | **179309.17** | **188921.00** | **194550.45** | **211591.52** | **232784.96** | **241233.22** | **270181.21** | **299901.15** |
| **தொகுக்கப்பட்ட கணக்குகள் *** | | | | | | | | |
| தொகுக்கப்பட்ட வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | **-3879.82** | **-1808.84** | **-2273.92** | **-1745.93** | **-2223.30** | **-2328.08** | **-1378.27** | **-749.16** |
| தொகுக்கப்பட்ட நிதி உபரி(+) / பற்றாக்குறை (–) | **-8245.80** | **-8131.94** | **-7090.95** | **-8324.91** | **-8202.84** | **-10227.73** | **-9634.91** | **-8983.11** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் தொகுக்கப்பட்ட நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) | -4.60% | -4.30% | -3.64% | -3.93% | -3.52% | -4.24% | -3.57% | -3.00% |

*இதில் மாநில வரவு–செலவுத் திட்டத்துடன் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி இவை. சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இங்கு பதிப்பிக்க நிதிக் கணக்குகள் செயல்பாட்டுமையும் கதிக்கும் மற்றும் ஆண்டு நிதி விவர அறிக்கையுடன் பொருந்த

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227378
சென்னை-600 008